

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 213 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 01 – வியாழக்கிழமை 14 மார்ச் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 213 : Thiruvalluvar Year - 2055 - Panguni 01 - Thursday 14 March 2024 - Madurai 12 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 57,325 பயனாளிகளுக்கு 223 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர். நடராசன், கே.சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாமல் புளுகி வரும் மோடி ஆட்சியை அகற்றி - “இந்தியா கூட்டணி”க்கு வெற்றியைத் தாருங்கள்!

# 10 மடங்கு சாதனைகளை கழக அரசு மேலும் செய்யும்!

## பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில் - கழக அரசு நிறைவேற்றிவரும் திட்டங்களை அடுக்கடுக்காகப் பட்டியலிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**பொள்ளாச்சி, மார்ச் 14 -**

**கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நேற்று (13.03.2024) நடைபெற்ற அரசு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விழாப்பேருரை ஆற்றுகையில், “தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யாமல் புளுகி வரும் மோடி ஆட்சியை அகற்றி” “இந்தியா கூட்டணி”க்கு வெற்றியைத் தாருங்கள் என்றும், 10 மடங்கு சாதனைகளை கழக அரசு மேலும் செய்யும் என்றும் கழக அரசு நிறைவேற்றிவரும் திட்டங்களை அடுக்கடுக்காகப் பட்டியலிட்டு உறுதிபட தெரிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

பொலிவு மிகுந்த பொள்ளாச்சி நகரில், கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய நான்கு மாவட்ட மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற எழுச்சிமிகு விழாவில் மகிழ்ச்சியோடு நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

**தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய மகிழ்வோடு விழாவுக்கு வந்திருக்கிறேன்!**

இந்த மாவட்டங்களுக்கெல்லாம் நான் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றிய மன உறுதியோடு, தெம்போடு, துணிவோடு உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 560 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 273 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 489 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 57,325 பயனாளிகளுக்கு 223 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, விழாப்பேருரை ஆற்றினார்.

உங்களுடைய முகங்களை நான் பார்க்கிறேன். நீங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக வந்திருக்கிறீர்கள். உங்கள் மகிழ்ச்சியை, எழுச்சியை பார்க்கின்றபோது நாடாளுமன்றத் இருக்கின்ற இளைஞர்களிடம் கூட அவருடைய அந்த பாடல் நன்றாக ரீச் ஆகியிருக்கிறது!

“பொதியை ஏற்றி வண்டியிலே பொள்ளாச்சி சந்தையிலே விருதுநகர் வியாபாரிக்கு சின்னக்கண்ணு, நீயும் வித்து போட்டு பணத்த எண்ணு செல்லக் கண்ணு” என்ற இந்த பாடல் பொள்ளாச்சியோட வர்த்தகப் பெருமையை சொல்லுகிறது!

## தமிழ்நாட்டு நலனுக்கு எதிரான அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணி! தமிழ்நாட்டை வளமாக்க ஜனநாயக சக்திகளும் - தி.மு.க.வும் ஒன்றுபட்டு நிற்கிறோம்!

தி.மு.க. ஆட்சி அமைய நீங்கள் அளித்த வாக்குகளை, பின்னால் இருக்கின்ற நம்பிக்கையை சிந்தாமல், சிதறாமல் பாதுகாத்து வாக்களிக்க தவறியவர்களின் நம்பிக்கையைப் பெறுகின்ற வகையில், இதுவரை மூன்றாண்டு கால ஆட்சியை வழங்கிய பெருமையுடன் தேர்தலாக இருந்தாலும், பொதுத் தேர்தலாக இருந்தாலும், எந்த தேர்தல் வந்தாலும் நாம் தான் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது.

பொள்ளாச்சி என்றாலே, கவிஞர் மருதகாசி எழுதிய பாட்டுதான் பலருக்கும் ஞாபகம் வரும். அதிலும், இன்றைக்கு இன்ஸ்டாகிராமில்

அப்படிப்பட்ட இந்த பொள்ளாச்சி அமைந்திருக்கக்கூடிய இந்த கோவை மாவட்டத்துக்கு நான்கு முறை வந்து ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 949 பேருக்கு ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறேன்.

**விழாவை சிறப்பாக நடத்தும் செயல்வீரர் அமைச்சர் முத்துசாமி!**

இன்று ஐந்தாவது முறையாக வந்திருக்கிறேன். இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அமைச்சர் முத்துசாமி அவர்களை பொறுத்தவரைக்கும், அமைதியாக இருக்கக்கூடியவர்; அடக்கமாக இருக்கக்கூடியவர்; ஆனால், அதே நேரத்தில் ஆற்றல்மிக்க அமைச்சர்! அதிகம் அலட்டிக்கொள்ள மாட்டார்; ஆனால், களத்தில் சுறுசுறுப்பாக வேலைகளை செய்யக்கூடியவர். அப்படியொரு செயல்வீரர்தான் நம்முடைய அமைச்சர் முத்துசாமி அவர்கள்!

இது என்ன அரசு நிகழ்ச்சியா அல்லது ஒரு மண்டல மாநாடா, என்று எண்ணக்கூடிய அளவிற்கு இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த நான்கு மாவட்டத்தின் அமைச்சர்களுக்கும், நான்கு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## தேர்தல் பத்திரங்கள் வாங்கியவர்களின் விவரங்கள்:

# உச்சநீதிமன்றத்தில் பாரத ஸ்டேட் வங்கி பிரமாண பத்திரம் தாக்கல்!

## 22 ஆயிரத்து 217 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் விற்பனையானதாக தகவல்!

புதுடெல்லி, மார்ச் 14 -

‘தேர்தல் பத்திரங்கள் சட்டவிரோதம்’ எனக் கூறி, அந்தத் திட்டத்தை ரத்து செய்த உச்ச நீதிமன்றம், ‘தேர்தல் பத்திரங்கள் மூலமாக நிதி வழங்கியவர்களின் விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் வழங்க பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டது.

கெடுவிற்குள் விவரங்களை வழங்காமல், எஸ்.பி.ஐ, கால அவகாசம் கோரியது. இதற்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்த நிலையில், தேர்தல் பத்திரங்கள் வாங்கியவர்களின் விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வழங்கியது.

இந்த நிலையில் இது தொடர்பாக எஸ்.பி.ஐ., உச்ச நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

அதில் 22 ஆயிரத்து 217 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் 22 ஆயிரத்து 30 நன்கொடை பத்திரங்களை அரசியல் கட்சிகள் பணமாக்கி உள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நன்கொடை பத்திரங்களை வாங்கிய நபர்களின் பெயர், தேதி, தொகை குறித்த விவரங்களும் அதனை எந்தெந்த அரசியல் கட்சிகள் பணமாக்கி உள்ளன. எந்த தேதியில் எவ்வளவு பத்திரங்கள் பணமாக்கப்பட்டுள்ளன என்பது குறித்த விவரங்களும் தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

**தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் ஆலோசனை!**

தேர்தல் நன்கொடை பத்திர விபரங்களை இணையத்தில் வெளியிடுவது தொடர்பான உச்சநீதிமன்றம் விதித்துள்ள கெடு நாளையுடன் நிறைவடைகிறது.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் அதிகாரிகளுடன் டெல்லியில் இன்று ஆலோசனை நடத்துகிறார்.

---

## சொத்து வரி - வீட்டு வரி செலுத்துவதிலிருந்து

# முன்னாள் ராணுவ வீரர்களுக்கு விலக்கு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

*சென்னை, மார்ச் 14 -*

*கைம்பெண்கள், போரில் ஊனமுற்ற வீரர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த சொத்து வரி, வீட்டு வரி வரிச்சலுகை, முன்னாள் ராணுவ வீரர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.*

*இந்த நிலையில் இதனைச் செயல்படுத்தும் விதமாக நடப்பு நிதியாண்டில் இருந்து முன்னாள் ராணுவ வீரர்கள் சொத்து வரி, வீட்டு வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*இதன்மூலம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் முன்னாள் ராணுவ வீரர்கள் பயன்பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*வருமான வரி செலுத்துபவருக்கு இச்சலுகை பொருந்தாது என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 14-03-2024

# மோடியின் கடைசி அஸ்திரம்!

இதுவரை ஏவிய அனைத்தும் முழுப்பயனைத் தராததால் தனது கடைசி அஸ்திரத்தை ஏவிவிட்டார் பிரதமர் நரேந்திரமோடி. அதுதான் குடியுரிமைச் சட்டம் ஆகும். அதுவும் துருப்பிடித்துப் போன பழைய அஸ்திரம் என்பதால் இதுவும் பலனைத் தரப்போவது இல்லை.

**குடியுரிமைச் சட்டமானது இந்தியாவுக்குள் உள்நாட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தத்தான் பயன்படுமே தவிர, அமைதியை ஏற்படுத்தாது. தனது பதவியை விட்டு இறங்கும் போது தீராப் பழியைப் பெற்றுக் கொண்டு விடைபெறப் போகிறார் மோடி. பதவிக் காலம் முடியும் நேரத்தில் பதற்றம் காரணமாக, எல்லாவற்றையும் செய்ய முயற்சிப்பதானது, அவர் எத்தகைய குழப்பத்தில் இருக்கிறார் என்பதையே காட்டுகிறது.**

2019 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம்தான் குடியுரிமை திருத்தச் சட்டம் - 2019 ஆகும். சுருக்கமாக சி.ஏ.ஏ. அதற்கு 2024 ஆம் ஆண்டு அறிவிக்கை வெளியிடுகிறது பா.ஜ.க. ஐந்து ஆண்டுகள் ஏன் ஆனது? எதற்காக அது அமுக்கி வைக்கப்பட்டு இருந்தது? மக்களின் எதிர்ப்பு காரணமாக அமுக்கி வைக்கப்பட்டு இருந்தது. இப்போது தேர்தல் வரப் போவதால் - அதைக் கையில் எடுப்பதன் மூலமாக வாக்கு வங்கி அரசியலுக்குப் பயன்படுத்தப் பார்க்கிறது பா.ஜ.க.

★ இசுலாமியர்களையும்

★ இலங்கைத் தமிழர்களையும் கைவிடும் சட்டம்தான் பா.ஜ.க.வின் இந்த குடியுரிமைச் சட்டம். இதனை தொடக்கத்தில் இருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்தது. மக்கள் மன்றத்தில் அந்தச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்துகளைப் பெற்று குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது. இதுபோன்ற போராட்டங்களால்தான் அந்தச் சட்டத்தை கையில் எடுக்காமல் வைத்திருந்தார்கள்.

**குடியுரிமை வழங்கும் நோக்கம் உன்னதமானது. ஆனால் இன்னார்க்கு மட்டும்தான் குடியுரிமை என்பதுதான் மோசமானது. சிறுபான்மையினரான இசுலாமியரை புறக்கணிக்கும் வகையில் குடியுரிமைச் சட்டத்தையே ஓரவஞ்சனை கொண்ட சட்டமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றிவிட்டது. இசுலாமியர் மீதான வெறுப்பை விதைக்கிறது இந்தச் சட்டம். மதத்தின் பேரால் ஒருவரை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது என்கிறது அரசியலமைப்புச் சட்டம். அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என்கிறது அரசியலமைப்புச் சட்டம். ஆனால் மதச் சிறுபான்மை மக்களைப் புறக்கணிக்கும் ஒரு சட்டத்தை எப்படி நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும்?**

இந்தியாவுக்குள் யார் எல்லாம் வரலாம், வந்தால் யாருக்கெல்லாம் குடியுரிமை வழங்கப்படும் என்று இந்த சட்டம் வரையறுக்கிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்கிறார்கள். அனைவரும் வரலாம் என்று சொல்லவில்லை. அந்த நாட்டைச் சேர்ந்த இசுலாமியர்கள் நீங்கலாக மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்கிறார்கள். இசுலாமிய சிறுபான்மையினரை எதற்காக புறக்கணிக்க வேண்டும்?

**பாகிஸ்தானில் இருந்து, வங்க தேசத்தில் இருந்து, ஆப்கானிஸ்தானத்தில் இருந்து இசுலாமியர் நீங்கலான மற்ற மதத்தவர்கள் வரலாம் என்றால் அண்டை நாடான இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்குத் தடை விதித்தது ஏன்? இதுதான் ஈழத்தமிழர்க்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம்.**

ஈழத்தமிழர்கள் அந்த நாட்டில் வாழ முடியாமல் தமிழகம் தப்பி வந்து முகாம்களிலும் வெளியிலும் வாழ்ந்து வருகிறார்கள். 1980 ஆம் ஆண்டு முதல் அவர்கள் அபலைகளாக தமிழ்நாட்டில் வந்து தங்கி இருக்கிறார்கள். அண்டை நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குகிறோம் என்றால் இலங்கை அண்டை நாடு அல்லவா? மற்ற அண்டை நாட்டைச் சேர்ந்த இந்துக்கள் வரலாம் என்றால் ஈழத்தில் இருக்கும் தமிழர்களை இந்துக்களாக இந்த மத்திய அரசு நினைக்கவில்லையா?

**பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களால் தொல்லைக்குள்ளாக்கப்படும் மற்ற மதத்தவரைக் காப்பாற்றுவது இச்சட்டத்தின் நோக்கம் என்றால், பவுத்த சிங்களவர்களால் தமிழர்கள் கொல்லப்படுவது பற்றி பா.ஜ.க. அரசு கவலைப்படாதது ஏன்? ஈழத்தில் இருப்பவர்கள் இனத்தால் தமிழர்களாக இருந்தாலும் அவர்களது சமய நம்பிக்கை இந்து - சைவம் தானே? 'இந்து மதத்தைக் காப்பாற்ற வந்தவர்களாக தங்களை உருவகப்படுத்திக் கொள்ளும் பா.ஜ.க. அரசு, இலங்கை இந்துக்களைக் கைவிட்டது ஏன்? இதுவே அவர்களது போலித்தனத்தைக் காட்டவில்லையா?**

தமிழகத்தில் சுமார் 70 ஆயிரம் ஈழத்தமிழர்கள் அவர்களுக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் 1983ம் ஆண்டு வந்தவர்கள் முதல் 2002ம் ஆண்டு வந்தவர்கள் வரை இதில் இருக்கிறார்கள். இவர்களால் மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடியாது. இலங்கையில் போர் முடிந்தாலும் அங்கு தமிழர்கள் உரிமை பெற்றவர்களாக வாழும் நிலைமை ஏற்படவில்லை. தமிழர்கள் உரிமைகளைப் பற்றிக் கவலைப்படாத ஆட்சிதான் அங்கு உருவாகி இருக்கிறது. எனவே, முப்பதாண்டு காலமாக இங்கு அகதிகளாக வந்து தங்கி இருக்கும் ஈழத்தமிழர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்குவதுதானே சரியானது? அவர்கள் மீண்டும் இலங்கைக்குச் செல்ல விரும்பவில்லை. அவர்களது விருப்பத்துக்கு மாறாக அனுப்பவும் முடியாது. இதனை விட தமிழினத்துக்கு துரோகம் இருக்க முடியுமா? தமிழனின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயல் இருக்க முடியுமா?

சிறுபான்மை மக்கள் மீதான வெறுப்பை விதைப்பதன் மூலமாக வாக்கு அறுவடை செய்வதே இதன் நோக்கம் ஆகும். இப்படி எல்லாம் எந்தப் பெரும்பான்மை மக்களும் நினைக்க வில்லை. தாங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்றுதான் பெரும்பான்மை மக்கள் நினைக்கிறார்களே தவிர, அடுத்தவர்கள் வாழக் கூடாது என்று நினைப்பது இல்லை. ஆனால் அப்படி ஒரு எண்ணத்தை விதைத்து, பெரும்பான்மை மக்களைப் பிளவுபடுத்தப் பார்க்கிறது பா.ஜ.க. நாடு அமைதியாக இருப்பதை விரும்பவில்லை பா.ஜ.க. குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலமாக அப்படியாவது வாக்கு கிடைத்துவிடுமா என நப்பாசைப்படுகிறது பா.ஜ.க. அதுவும் கைவிடப் போகிறது என்பதுதான் உண்மை.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 57,325 பயனாளிகளுக்கு 223 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர்கள் வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர்.நடராசன், கே.சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் – திருமயத்தில்

# ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத்துறை - பொது சுகாதாரத்துறை கட்டடங்கள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - மா.சுப்பிரமணியன் - சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, மார்ச் 14-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத் துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ. சா.மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று முன்தினம் (12.03.2024) திறந்து வைத்து, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி

இதைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொது மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத் துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் இப்பகுதிகளை சுற்றியுள்ள பொதுமக்கள் மருத்துவத்திற்காக நீண்ட தூரம் சென்று வருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகாமையிலேயே மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனை இப்பகுதி பொது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்.

எனவே தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன்

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களும் உயர் தரத்திலான மருத்துவ சிகிச்சைகளை பெற வேண்டும் என்ற அடிப்படையில் மருத்துவத்துறை சார்ந்த எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் உள்ளிட்டவைகளுக்கு தேவையான கூடுதல் கட்டடங்கள், மருத்துவ சிகிச்சை பிரிவுகள், மருந்து இருப்புகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் போதுமான அளவில் நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.7.44 கோடி செலவில் 21 புதிய அரசு மருத்துவத்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

அந்தவகையில், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அரசு மருத்துவமனைகள், விராலி மலையில் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கண் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் செவித்திறன் ஆய்வு அரங்கம் மற்றும் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் தாய்ப் பால் வங்கி மற்றும் விராலி மலை அரசு மருத்துவமனையில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் அவசர சிகிச்சை விபத்துப்பிரிவு உள்ளிட்ட முடிவுற்ற மருத்தவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், திருமயம் ஊராட்சி ஒன்றியம், இராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், தேசிய சுகாதார திட்டம் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ், ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் ராங்கியத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் விராச்சிலையில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் விராலிமலை பாலாண்டம் பட்டியில், ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் முக்கணா மலைப்பட்டியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் செவிலியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் அறந்தாங்கியில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் மீமிசல் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் உள்ளிட்ட முடிவுற்ற மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் துணை சுகாதார நிலையங்கள், விராலிமலை புதுதக்குடியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் கந்தர்வகோட்டை மருதூரில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் உப்பிலியக்குடியில் ரூ.25 மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் அறந்தாங்கி அம்பலவானேந்தலில் ரூ.46.5 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் அறந்தாங்கி அம்மாபட்டிணத்தில் ரூ.46.5 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் புதுக்கோட்டை எம்.தெற்கு தெருவில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் ஆலங்குடி பாலையூரில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வெண்ணாவல்குடியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் கந்தர்வகோட்டை வேம்பன்பட்டியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் மற்றும் ஆலங்குடி குளவாய்ப்பட்டியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் உள்ளிட்ட முடிவுற்ற மருத்துவக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் காக்கும் வகையில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் காப்போம் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்படும் இது போன்ற திட்டங்களினால் ஏழை, எளிய பொதுமக்களும் நோயில்லா நல்வாழ்வு வாழ முடியும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

### அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொது மக்களுக்கும் நல்ல மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படை யில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, பல்வேறு மருத்துவத்துறை சார்ந்த கட்டடங்கள் திறந்து வைத்து, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் இன்றையதினம் வழங்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின்கீழ், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் இதுநாள் வரை 21,056 பயனாளிகளுக்கு ரூ.12.70 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கண்ணொளி காப்போம் திட்டத்தின்கீழ் 2023 - 2024 ஆம் நிதியாண்டில் 3,669 பயனாளிகளுக்கு கண் கண்ணாடிகளும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மருத்துவத்துறை கட்டிடங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களை பயன்படுத்தி நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்ல பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.ஸ்ரீபிரியா தேன்மொழி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இரா.மணி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), தொழிலதிபர் வள்ளியப்பன், திருமயம் ஒன்றியக்குழுத் தலைவர் அழ. ராமு, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் பிரவீன்குமார் அரசு ஒப்பந்தகாரர் கணேசன், வட்டாட்சியர் புவியரசன், இராங்கியம் ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி. சாந்தி, ஊராட்சிமன்ற துணைத் தலைவர் திருமதி. கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர் ஜெகதீசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





வேலூர் காட்பாடியில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் டீசல் விற்பனை நிலையத்தை கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.இரா.சுப்புலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், மாநகர தி.மு.க செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணைமேயர் எம்.சுனில் குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சற்குண ஐயப்ப துரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளிடமிருந்து நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்யப்படும்!

## பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில் திட்டங்களைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை தலைப்புகளாக முதலில் பட்டியலிட விரும்புகிறேன்.

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- மகளிர்க்கு விடியல் பயணம்
- புதுமைப்பெண் திட்டம்
- காலை உணவுத் திட்டம்
- இல்லம் தேடி கல்வி
- நான் முதல்வன் திட்டம்
- மக்களைத் தேடி மருத்துவம்
- இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும் 48
- களஆய்வில் முதலமைச்சர் திட்டம்
- மக்களுடன் முதல்வர் திட்டம்

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாய் "நீங்கள் நலமா?" திட்டம்!

நம்முடைய திட்டங்கள் மூலமாக பயனடைந்த ஒவ்வொருவரையும் செல்போனில் அழைத்து, முதலில், நீங்கள் நலமா என்று கேட்கிறேன். பின்னர், திட்டத்தின் பயன் வந்து சேர்ந்ததா என்று கேட்கிறேன். அதில் ஏதாவது சிரமம் இருக்கிறதா என்று கேட்கிறேன். கோட்டையிலிருந்து மட்டும் திட்டங்களை அறிவிக்காமல், கடைக்கோடியில் இருக்கின்ற மக்களிடமும் பேசுகின்ற முதலமைச்சராக இருக்கக் கூடியவன் நான் தான்! இதை நான் கர்வத்தோடு சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். அடக்கத்தோடு சொல்கிறேன். உரிமையோடு சொல்கிறேன்.

### அவதூறுகளைப் பரப்புபவர்களுக்கு தக்க பாடம் புகட்டும் நேரம் வந்து விட்டது!

உங்கள் ஒவ்வொருவருடைய உணர்வையும் மதிக்கின்றவன் நான்! உங்கள் ஒவ்வொருவருடைய கருத்தையும் காது கொடுத்து கேட்கிறவன் நான்! உங்கள் கோரிக்கைகளை-தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்று உழைக்கின்ற முதலமைச்சர் நான்! அதனால்தான், "நீங்கள் நலமா?" திட்டத்தை தொடங்கியிருக்கிறேன். இப்படி சிந்தித்து, சிந்தித்து மக்களுக்கான முத்திரை திட்டங்களை உருவாக்கியதால் தான் தமிழ்நாட்டினுடைய தொழில்வளம் உயருகிறது! வேலைவாய்ப்பு பெருகுகிறது! பொருளாதாரம் வளருகிறது! ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேறுகிறது!

அதைப் பார்த்து சிலர் பொறாமைப்பட்டு, தமிழ்நாட்டு மக்களையும், தமிழர்களின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்துகின்ற வகையில், பொய்களையும், அவதூறுகளையும் பரப்ப "வாட்ஸ்அப் யுனிவர்சிட்டி" நடத்துகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் தக்க பாடம் புகட்டுகிற நேரம் வந்துவிட்டது! வந்துவிட்டதா, இல்லையா?

### கோவை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்!

நம் மண்ணை, நம் தமிழை, நம் பண்பாட்டை, நம் வரலாற்றை, நம் பெருமையை பழிப்பவர்களுக்கு பதில் சொல்கின்ற காலம் வந்துவிட்டது! அதன் அடையாளம்தான், இங்கே நீங்கள் திரண்டு வந்திருக்கின்ற காட்சி! திரளாக வந்திருக்கும் உங்களிடையே கோவை மாவட்டத்துக்கு செய்திருக்கக்கூடிய வளர்ச்சிப் பணிகளை வரிசையாக பட்டியலிட விரும்புகிறேன்.

- பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட மூன்றாம் கட்டப் பணிகள் நிறைவு,
- செம்மொழிப் பூங்கா அமைக்க அடிக்கல்,
- சங்கனூர் ஓடை புனரமைப்பு,
- உக்கடம், ஆத்துப்பாலம் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு நீட்டிப்புப் பணி,
- அவிநாசி சாலை உயர்மட்ட மேம்பாலம்,
- பொள்ளாச்சி புறவழிச்சாலை, மேற்குப் புறவழிச்சாலை பணிகள்
- விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பப் பூங்கா
- குறிச்சி தொழிற்பேட்டையில், அடுக்குமாடி ஆயத்தத் தொழில் வளாகம் என்று ஏராளமான திட்டங்களை கோவை மாவட்டத்துக்கு வழங்கியதோடு, இது எல்லாவற்றுக்கும் மகுடம் வைக்கின்ற மாதிரி, மதுரை போன்று கோவையில் அறிவியல் மையத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த ஒரு மாபெரும் நூலகமும் அமைக்கவுள்ள அரசுதான், உங்களுடைய அரசு இந்த அரசு!

### ஈரோடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள்!

அடுத்து, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஈரோடு மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில்

- பாதாள சாக்கடைத் திட்டம்,
- காலிங்கராயன் வாய்க்கால் புதுப்பிக்கும் பணி
- மாவட்ட மத்திய நூலகம் புதுப்பிப்பு,
- கிராமப்புறச் சாலைகள்,
- ஈரோடு மருத்துவமனைக்கு மாபெரும் கட்டடம்.
- வெள்ளோடு கிராமத்தில் 120 அடுக்குமாடி குடியிருப்புகள்
- சித்தோட்டில் மஞ்சள் ஏற்றுமதி மையம்
- ஜவுளி பூங்கா என்று பல்வேறு திட்டங்கள ஈரோட்டிற்காகச் செய்திருக்கிறோம்.

### திருப்பூர் - நீலகிரி மாவட்ட திட்டப் பணிகள்!

திருப்பூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்,

- பாதாள சாக்கடை திட்டம் இணைப்புகள்
- 843 கிலோ மீட்டர் நீளத்துக்கு சாலைகள்
- நான்கு பாலங்கள்
- புதிய பேருந்து நிலையம்
- 27 பள்ளிகளில் 60 புதிய வகுப்பறைகள் உள்ளிட்ட பணிகள் திருப்பூர் மாவட்டத்தில் செய்திருக்கிறோம்.

**நீலகிரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்,**

- யானைப் பாகர்களுக்கும், உதவியாளர்களுக்கும் வீடுகள்.
- தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் பேருக்கு ஓய்வூதியப் பலன்கள்
- தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு
- ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு குடியிருப்புகள் ஆகியவை வழங்கப்பட்டிருக்கு.
- நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக இரண்டு கிலோ கேழ்வரகு வழங்குகின்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழப்பவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற இழப்பீட்டுத்தொகையை 5 இலட்சத்தில் இருந்து 10 இலட்ச ரூபாயாக உயர்த்தியிருக்கோம்.

இப்படி கோவைக்கும், நீலகிரிக்கும், திருப்பூருக்கும், ஈரோட்டுக்கும் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்த ஆட்சிதான் உங்களுடைய திராவிட மாடல் ஆட்சி.

அதுமட்டுமில்லாமல், இந்த 4 மாவட்டங்களில் 560 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 273 திட்டங்கள் இன்றைய விழாவில், மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

489 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 35 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 560 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 273 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 489 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர். நடராசன், கே. சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் மருத்துவத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

223 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 57 ஆயிரத்து 325 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

இவற்றின் மொத்த மதிப்பு 1,273 கோடியே 51லட்சம் ரூபாய்! இதன் தொடர்ச்சியாக, சில புதிய அறிவிப்புகளையும் இந்த விழாவில் மகிழ்ச்சியோடு நான் வெளியிட விரும்புகிறேன்..

**முதலில், கோவை மாவட்டத்துக்கான பதி மூன்று அறிவிப்புகள்...**

இந்த பொள்ளாச்சி பகுதி தென்னை மரங்கள் நிறைந்து இருக்கின்ற பகுதி. கோடை வெயிலுக்கு குளிர்ச்சியை தருகின்ற பொள்ளாச்சி, இளநீரை விளைவிக்கின்ற வகையில் ஒரு அறிவிப்பை முதலில் நான் வெளியிட விரும்புகிறேன்.

தென்னை மரங்களை அதிகமாக பாதிக்கின்ற நோய் வேர்வாடல் நோய் இருக்கு. அந்த தென்னை வேர்வாடல் நோய் பாதிப்பு அதிகமாக இருக்கின்ற மரங்களை வெட்டி அகற்றுவதற்காக 14 கோடியே 4 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.

இரண்டாவதாக, 3 இலட்சம் தென்னங்கன்றுகள், 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

மூன்றாவதாக, அகில இந்திய அளவில் தேங்காய் விற்பனை செய்வதற்கான உரிய சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்த தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்கீழ் செயல்படுகிற 157 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம் வெளி மாநில வணிகர்களோடு தொடர்பு ஏற்படுத்தி, வெளிப்படைத் தன்மையோடு வணிகர்கள் மற்றும் வேளாண் பெருமக்கள் நேரடியாக விற்பனையில் கலந்து கொள்வதை ஊக்குவித்து, தென்னை விவசாயப் பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், வங்கி பரிவர்த்தனை மூலமாக அவர்களுடைய வங்கி கணக்குக்கு உடனடியாக வரவு வைக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

நான்காவதாக, தென்னை விவசாயின் நலன் கருதி, கூட்டுறவு விற்பனை சங்கங்களின் மூலம் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்து கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்களின் மூலம் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படும்.

ஐந்தாவது அறிவிப்பாக, விலாமரத்தூர் சாலை முதல் அத்திக்கடவு அணை வரை 8.29 கிலோ மீட்டர் நீளத்தில், 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்படும்.

ஆறாவதாக, வார்டு எண் 11 மூங்கில் மடை குட்டை பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறுபாலம் மற்றும் வடிகால் அமைக்கப்படும்.

ஏழாவதாக, மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், மாவுத்தம்பதி ஊராட்சிக்குட்பட்ட வாளையார் வனப்பகுதியில் தரைமட்ட குடிநீர்த் தொட்டி கட்டித் தரப்படும்.

எட்டாவதாக, காரமடை, ஆனைமலை, சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 4 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுல சாலை சீரமைக்கப்படும்.

ஒன்பதாவது அறிவிப்பாக, இக்கரை பூளுவாம்பட்டி ஊராட்சி, பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம், சோமையம்பாளையம் ஊராட்சி, மதுக்கரை ஊராட்சிஒன்றியம்திவான்சாபுதூர் ஊராட்சி மற்றும் மாவுத்தம்பதி ஆகிய ஊராட்சிகளில் நான்கு பாலங்கள் கட்டப்படும்.

பத்தாவதாக, 15 அங்கன்வாடி மையங்கள் -18 நியாயவிலைக் கடைகள் - 14 சமுதாய நலக் கூடங்கள் - 7 பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்படும்.

பதினோறாவது அறிவிப்பாக, கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில மழைநீர் வடிகால் மற்றும் கான்கீரிட் சாலை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பன்னிரண்டாவதாக, உக்கடம் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டு வரும் மேம்பாலத்தால் அகற்றப்பட்ட பேருந்துநிலையம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமுறையில் சீரமைக்கப்படும்.

பதிமூன்றாவது அறிவிப்பாக, ஆர்.எஸ். புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஹாக்கி விளையாட்டுத் தரை அமைக்கப்படும்.

**அடுத்து, ஈரோடு மாவட்டத்துக்கான ஒன்பது அறிவிப்புகள்**

முதலாவதாக, சோலார் பகுதியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காய்கறி மளிகை சந்தை வளாகம் அமைக்கப்படும்.

இரண்டாவதாக, வ.உ.சி பூங்கா, 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தித் தரப்படும்.

மூன்றாவதாக, ஈரோடு மாநகராட்சிப் பகுதியில 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன், காவேரி ஆற்று முகப்பு மேம்படுத்தப்படும்.

நாலாவதாக, புதிய மாவட்ட மைய நூலகம் ஒன்று 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஐந்தாவதாக, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பர்கூர் ஊராட்சி தாளவாடி ஊராட்சி ஒன்றியம் தலமலை ஆசனூர் ஊராட்சிகளில் மலைவாழ் மக்கள் வசிக்கும் இணைப்புச் சாலை வசதி இல்லாத அந்த 9 கிராமங்களுக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தப்படும்.

ஆறாவதாக, 8 சமுதாய நலக்கூடங்கள் கட்டப்படும்.

ஏழாவதாக, சத்தியமங்கலம் நகராட்சியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

எட்டாவது அறிவிப்பாக, மஞ்சள் மற்றும் மஞ்சள் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் இருப்பு வைத்து வியாபாரம் செய்ய ஏதுவாக குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்பதாவது அறிவிப்பாக, பெருந்துறையில் நொய்யல் ஆற்றின் வடக்கு கரையில் இருக்க கொடுமணல் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் அடுத்த தலைமுறையினரும் அறிந்துகொள்ள காட்சிப்படுத்திட ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், தொல்லியல் துறையின் மூலம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**அடுத்து, திருப்பூர் மாவட்டத்துக்கான ஐந்து அறிவிப்புகள்**

முதலாவதாக, பெருமாநல்லூர் சாலையில், நல்லாற்றில், பொம்மநாயக்கன்பாளையம் மற்றும் போயம்பாளையம் சாலை வரை மற்றும் பிச்சம்பாளையம் மெயின் சாலை முதல் ராஜா நகர் வரை 11 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலங்கள் கட்டப்படும்.

இரண்டாவதாக, திருப்பூர் மாநகராட்சிக்கு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் அமைக்கப்படும்.

மூன்றாவதாக, கிராமப் பகுதிகளில் 8 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் 1 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

நான்காவதாக, 13 சமுதாய நலக்கூடங்கள் 11 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஐந்தாவதாக, பல்லடம் அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிதாக விபத்து மற்றும் எலும்புமுறிவு சிறப்பு மருத்துவமனை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**அடுத்து, நீலகிரி மாவட்டத்துக்கான நான்கு அறிவிப்புகள்**

முதலாவதாக, உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்கா உலகத் தரத்துக்கு இணையாக மேம்படுத்தப்படும். இதற்காக பெரணி இல்லம் புதுப்பித்தல், புதிய சுகாதார வளாகம் அமைத்தல், ஆர்க்கிட் மற்றும் போன்சாய் வளர்ப்புக்கூடம், வடிகால் கால்வாய் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

இரண்டாவதாக, 5 அரசு துணை சுகாதார நிலையங்களுக்கு தலா 50 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாயில் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும்.

மூன்றாவதாக, தனியார் கட்டடங்களில் இயங்குகிற 10 நியாயவிலைக் கடைகளுக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

நான்காவதாக, நீலகிரி மாவட்டத்தில் 2 சமுதாய நலக் கூடங்கள் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இப்படி நான் அறிவிக்கிறேன் என்றால், நான் ஒரு கோப்பில், கையெழுத்துயிடுகிறபோது, இலட்சக்கணக்கான மக்கள் கோடிக்கணக்கான மக்கள் - மகிழ்ச்சி அடைகிறார்கள் என்று பொருள்!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

**நாட்டு மக்களுக்கு எதையுமே செய்து தராத பிரதமர், 'மோடியின் உத்தரவாதம்' என்று பக்கம் பக்கமாக விளம்பரம், டிவியில் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். பிரதமர் அவர்களே... மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே, நீங்கள் கொடுத்த பழைய உத்தரவாதமான ஒவ்வொருவருக்கும் 15 இலட்சம் ரூபாயின் இன்றைய கதி என்ன? இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு உத்தரவாதம் தந்தீர்களே அதன் கதி என்ன? அதை சொல்லுங்கள் பிரதமர் அவர்களே! அதுகூட வேண்டாம், அடுத்த ஒரு வாரத்தில் தமிழ்நாட்டுக்கு வருவதாக செய்தி வந்திருக்கிறது. வரப்போகிறார். தமிழ்நாட்டுக்குச் செய்து தந்திருக்கின்ற சிறப்புத் திட்டங்களை பட்டியலிடுங்கள்! என்ன சிறப்பு திட்டங்கள் கொண்டு வந்தீர்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் எல்லாரும் கேட்கவேண்டும்! "பதில் சொல்லுங்க பிரதமரே.." என்று எல்லோரும் கேட்க வேண்டும். கேட்பீர்களா?**

# அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி சம்பவம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கும் ஆட்சியாக கழக ஆட்சி செயல்பட்டு வருகிறது. பத்தாண்டு காலம் அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டில் நடந்தது. அவர்களால் இப்படி பட்டியலிட்டுச் சொல்ல முடியுமா?

மேற்கு மண்டலத்தை தங்களுடைய கோட்டை என்று சொல்லிக் கொண்டார்களே! வாக்களித்த மக்களுக்கு அதிமுக ஆட்சி ஏதாவது நன்மை செய்ததா?

இத்தனைக்கும் மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் அதிமுக ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தார்கள். அவர்கள் இந்த மேற்கு மண்டலத்துக்குச் செய்தது என்ன?

மகள்களைப் பெற்ற அத்தனை பெற்றோரையும் பதற வைத்தது பொள்ளாச்சி சம்பவம்! மறந்திட முடியுமா! பெண்களை மிரட்டி ஆபாசப்படம் எடுத்தவர்கள் தைரியமாக அ.தி.மு.க. ஆட்சியில் வலம் வந்தார்கள்! புகார் கொடுத்தவர்களை மிரட்டினார்கள்!

தி.மு.க. மகளிரணி சார்பில்தான், போராட்டம் நடத்தினார்கள். பிறகு, நடவடிக்கை எடுப்போம் என்று ஒரு நாடகம் போட்டார்கள்! ஆனால், சாட்சிகள் மிரட்டப்படுகின்ற வேடிக்கையைப் பார்த்தார்கள்!

பத்திரிக்கையாளர்கள் இதுபற்றி அன்றைய முதலமைச்சர் பழனிசாமியைக் கேட்ட போது, "அப்படியெதுவும் இல்லை. ஆதாரம் இருந்தால் கொடுங்க" என்று சொன்னார். நான் அப்போது தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த போது சொன்னேன். இதை நான் சும்மா விடமாட்டேன். நிச்சயமாக, இதற்குரிய நடவடிக்கையை இந்த ஸ்டாலின் உறுதியாக எடுப்பான் என்று அப்போதே நான் உறுதி தந்திருக்கிறேன். இன்றைக்கும் மறந்துவிடவில்லை.

பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் தெரியக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கும் நிலையில, அந்தப் பெண்ணுடைய பெயரையும், முகவரியையும் வெளிப்படையாக அறிவித்த அக்கறையற்ற ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி.

அந்த வழக்கு சி.பி.ஐ. விசாரித்து இப்போது நீதிமன்றத்தில் இருக்கிறது! அதுமட்டுமா! முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில், கொலை, கொள்ளை, தற்கொலை சம்பவம் நடந்தது இல்லையா!

அமைதி வழியில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக, போராடியவர்கள் மேல் தாக்குதல் நடத்தியது யார் ஆட்சியில்? பெண் போலீஸ் எஸ்.பி.க்கே பாதுகாப்பு இல்லாத வகையில் ஆட்சி நடத்தியது யார்?

தூத்துக்குடியில், 13 பேர் துப்பாக்கி யால் சுட்டு கொன்றது யாருடைய ஆட்சியில்?

**தமிழர் நலனுக்கு எதிரான அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணி!**

கஞ்சா - குட்கா மாமூல் பட்டியலில், அமைச்சரும், டி.ஜி.பி.யுமே இருந்தார்களே, அது யாருடைய ஆட்சியில்? அந்த வழக்கில் குற்றப் பத்திரிகை கூட தாக்கல் செய்ய விடாமல் தடுத்த கூட்டணிதான், இன்றைக்கு உத்தமர் வேஷம் போடுகிறார்கள். இந்தக் கூட்டணி மறுபடியும் மக்களை ஏமாற்றி பிரிந்த மாதிரி நடித்துக்கொண்டு வருகிறார்கள். நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டு நலனுக்கும், தமிழர்களின் நலனுக்கும் எதிரான அதிமுக - பாஜக கள்ளக்கூட்டணி ஒருபக்கம் என்றால், தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாட்டை வளமாக்க - தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க மற்றொரு பக்கம் ஜனநாயகச் சக்திகளும்தி.மு.க.வும் ஒற்றுமையாக நிற்கிறோம்!

> **மாநிலத்தைக் கெடுத்த அ.தி.மு.க., மாநிலத்தை கண்டு கொள்ளாத பா.ஜ.க! இந்த கள்ளக்கூட்டணியை மக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனே முக்கியம் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, நமது திராவிட மாடல் அரசுக்கு, தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் துணை இருப்பது போல், உண்மையான வளர்ச்சியை நமது நாடு காண, ஒட்டுமொத்த இந்திய மக்களும் தயாராகிவிட்டார்கள். பாசிசத்தை வீழ்த்த, இந்தியாவை காக்க உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்! தமிழ்நாட்டை உயர்த்துவோம்! இந்தியாவை காப்போம்!**

ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாத போதே, இத்தனை சாதனை திட்டங்களை நம்மால் கொடுக்க முடிகிறது என்றால், நமக்கு உதவி செய்கின்ற ஒன்றிய அரசு அங்கே அமைந்திருந்தால், இன்னும் பத்து மடங்கு சாதனைகளை இந்த திமுக செய்திருக்கும். அதற்கான நேரம் நெருங்கி வருகிறது!

நாட்டு மக்களுக்கு எதையுமே செய்து தராத பிரதமர், 'மோடியின் உத்தரவாதம்' என்று பக்கம் பக்கமாக விளம்பரம், டிவியில் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிரதமர் அவர்களே... மாண்பு மிகு பிரதமர் மோடி அவர்களே, நீங்கள் கொடுத்த பழைய உத்தரவாதமான ஒவ்வொருவருக்கும் 15 இலட்சம் ரூபாயின் இன்றைய கதி என்ன?

இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு உத்தரவாதம் தந்தீர்களே அதன் கதி என்ன? அதை சொல்லுங்கள் பிரதமர் அவர்களே!

அதுகூட வேண்டாம், அடுத்த ஒரு வாரத்தில் தமிழ்நாட்டுக்கு வருவதாக செய்தி வந்திருக்கிறது. வரப்போகிறார். தமிழ்நாட்டுக்குச் செய்து தந்திருக்கின்ற சிறப்புத் திட்டங்களை பட்டியலிடுங்கள்! என்ன சிறப்பு திட்டங்கள் கொண்டு வந்தீர்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் எல்லாரும் கேட்கவேண்டும்! "பதில் சொல்லுங்க பிரதமரே.." என்று எல்லோரும் கேட்க வேண்டும்.

கேட்பீர்களா!

**திட்டத்தைத் தடுப்பதாக அண்ட புளுகு ஆகாசப் புளுகு மோடியின் புளுகு!**

கடந்த முறை வந்தபோது பேசுகிறார்... பா.ஜ.க. தமிழ்நாட்டுக்கு கொண்டு வருகின்ற திட்டங்களை தி.மு.க. தடுக்கின்றது என்று பிரதமர் சொல்கிறார். பிரதமர் அவர்கள் சொல்கிறார். அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை, நாம் சென்று தடுக்கிறோமா!

நீங்கள் ஒரு பழமொழி கேட்டிருப்பீர்கள், அண்ட புளுகு ஆகாசப் புளுகுனு சொல்லுவார்கள் - அது மாதிரி, இது மோடி புளுகு! அவர் என்ன திட்டத்தை கொண்டு வந்தார்; நாம் தடுப்பதற்கு? எந்த திட்டத்துக்கு நாம் தடையாக இருந்தோம் என்று சொல் வாரா? நான் ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை 2014ல் அறிவித்தார்கள். அப்போது யார் தமிழ்நாட்டில் முதலமைச்சர்? மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இருந்தார். அவர் தடுத்தாரா? இல்லையே.

அடுத்து, உங்கள் நண்பர்கள் ஓ.பி.எஸ், இ.பி.எஸ் அவர்கள் தடுத்தார்களா? இல்லையே. 2021ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம், நாங்கள் தடுத்தோமா? இல்லை, தமிழ்நாட்டு மக்கள்தான் தடுத்தார்களா? இல்லையே? உங்களை யாரும் தடுக்கவில்லையே! ஆட்சியில் இருந்த பத்து வருஷமாக தமிழ்நாடின் திரும்பி பார்க்காமல், தேர்தலுக்காக பத்து நாள் வந்து பொய் சொன்னால் தமிழ்நாட்டு மக்களான நாங்கள் என்ன ஏமாளிகளா? நாங்கள் என்ன இளிச்சவாயன்களா?

**பா.ஜ.க.வின் பொய்யும் வாட்ஸ் அப் கதைகளும் எடுபடாது!**

பொய்யும், வாட்ஸ்அப் கதைகளும்தான் பா.ஜ.க.வின் உயிர் மூச்சு! இனி இந்த பொய்களும் கட்டுக்கதைகளும் மக்களிடம் எடுபடாது!

மாநிலத்தைக் கெடுத்த அ.தி.மு.க. மாநிலத்தை கண்டு கொள்ளாத பா.ஜ.க! இந்த கள்ளக்கூட்டணியை மக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலனே முக்கியம் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, நமது திராவிட மாடல் அரசுக்கு, தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் துணை இருப்பது போல், உண்மையான வளர்ச்சியை நமது நாடு காண, ஒட்டுமொத்த இந்திய மக்களும் தயாராகிவிட்டார்கள். பாசிசத்தை வீழ்த்த, இந்தியாவை காக்க உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்! தமிழ்நாட்டை உயர்த்துவோம்! இந்தியாவை காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




கிருஷ்ணகிரியில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் கழக வர்த்தக அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் ஏளாளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மோடியா - இந்த லேடியா எனக் கேட்டு பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்தது என் வாழ்நாள் தவறு என்றவர்!

# உச்சநீதிமன்றத்தால் ஊழலில் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதா நல்லாட்சி நடத்தினாரா?

## கிருஷ்ணகிரியில் - பிரதமர் மோடியின் பேச்சைக் கண்டித்து கவிஞர் காசிமுத்துமாணிக்கம் பேச்சு!

*கிருஷ்ணகிரி, மார்ச் 14-*

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் கூட்டம் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் நவாப் முன்னிலை வகிக்க. தி.மு.க. வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில்,

பிரதமர், சென்னையில்' "எம். ஜி. ஆரும், ஜெயலலிதாவும்தான் சிறப்பான ஆட்சி தந்தார்கள்" என்று பேசியுள்ளார். அவரிடம் எனக்கு சில சந்தேகங்கள். மோடி பதில் சொல்ல வேண்டும்.

**சந்தேகத்திற்கு பதில்தேவை ஜீ!**

"சிறுபான்மையினரை கொடுமைபடுத்திய பா.ஜ.கவுடன் நான் கூட்டணி வைத்ததுதான் என் வாழ் நாளில் நான் செய்த பெரும் தவறு என்றாரே ஜெயலலிதா" அது சரிதானா?

"இனி என் வாழ்நாளில் பா.ஜ.கவுடன் எந்தச் சூழலிலும் சேரமாட்டேன்" என்றாரே? நினைவு இருக்கிறதா. அதுவும் சிறந்த ஆட்சியின் அங்கமா?

"மோடியா இந்த லேடியா" என்றால் என்ன அர்த்தம். "அந்தக் கெட்டவனா இந்த நல்லவளா" என்பதுதானே கோஷம், ஜெயலலிதாவின் சிறந்த ஆட்சியில் மோடி கெட்டவன் என்பது ஜெ கூற்றுப்படி அடக்கமா?

எங்கே சொல்லுங்கள் பார்ப்போம். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பொய் வழக்கில் காஞ்சி சங்கராச்சாரியாரை ஆந்திராவில் தீபாவளி பூஜை ஒன்றில் இருந்தவரை ஹெலிகாப்டரில் சென்று தூக்கி வரச்செய்து சிறையில் அடைத்து, கோவிலுக்குச் சொந்தமான மருத்துவமனை தனக்கு தர வேண்டும் என மிரட்டினாரே அதுதான் நேர்மையான சிறந்த ஆட்சியா? அப்போது வேண்டாம், இப்போது கூறுங்கள், அவ்வளவு விரைவாக கைது செய்தது சரியா? இப்போதுதான் கூட்டணி இல்லையே தைரியமாய் சொல்லுங்கள்.

மூப்பனாரை சுண்டைக் காய் என்றும், திருச்சி பொதுக்கூட்டத்தில் கலகம் செய்தார் என்றும் கூறியது சரிதானா என தங்கள் பக்கத்தில் இருக்கும் ஜி.கே.வாசனை கேட்டு சொல்லுங்களேன் இதுதான் சிறந்த ஆட்சியின் லட்சணமா?

**அமைதிப் படை சத்தியராஜ்!**

அத்வானியை செலக்டீவ் அம்னீஷியா என்றாரே அதுகூட சிறந்த ஆட்சியில் வரும் எனில் அத்வானி அப்படித்தான் என நீங்கள் கூறுவது போலாகும். பரவாயில்லையா? ஓட்டு வந்தால் சரி அத்வானி அசிங்கப்பட்டால் நமக்கென்ன? நாம் தான் அமைதிப்படை சத்தியராஜ் ஆயிற்றே.

உச்சநீதி மன்றத்தால் ரூ.100 கோடி அபராதம். உயிர் இருந்தால் 2ம் குற்றவாளியான சசிகலாபோல் 4 ஆண்டு சிறைதண்டனை என இறுதி தீர்ப்பு பெற்ற ஜெயலலிதாவின் நிர்வாகம்தான் சிறந்தது என்றால் இந்தியாவில் உள்ள மற்ற பா.ஜ.க. முதல்வர்களும் ஜெயலலிதாபோல் சிறைக்கு போகச்சொல்கிறீர்கள் அப்படித்தானே! மற்றவர் மனம் புண்படுவதை பொருட்படுத்தாது. தன்னை அன்னை தெரசாவாக, பராசக்தியாக போஸ்டர், கட்அவுட், ப்ளக்ஸ் போர்டு என மாற்றிக் கொண்டதுதான் சிறந்த ஆட்சியா?

வழக்காடு மன்றத்தில் ஜெயலலிதா குற்றவாளி என கூறியதற்காக தர்மபுரியில் மூன்று கல்லூரி மாணவிகளை பேருந்தோடு சேர்த்து எரித்ததுதான் சிறந்த ஆட்சியா?

உங்கள் கட்சி சுப்பிரமணியசுவாமி வழக்காடு மன்றம் போனபோது கற்பின் அடையாளத்தை தூக்கி காட்டி தனது மகளிரை போராட்டம் செய்ய சொன்னதுதான் சிறந்த ஆட்சியா?

தனது சொந்த கட்சிக்காரர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் இராணிப்பேட்டை மோகன், உப்பிலியாபுரம் ரவிச்சந்திரன், மதுராந்தகம் சொக்கலிங்கம், தூத்துக்குடி ரமேஷ் போன்றவர்கள் அடித்து துவைத்து. மருத்துவமனைகளில் வாரக்கணக்கில் தொங்கவிட்டதுதான் சிறந்த ஆட்சியா?

ஊட்டியில் செல்லமாக தன்னை தட்டிவிட்டது என்பதற்காக அப்பு யானை அடுத்துமுறை நான் இங்கே வரும்போது அந்த குட்டியானை அப்பு உயிருடன் இருக்கக்கூடாது எனகூறி மேலூருக்கு அனுப்பிவைப்பதுதான் சிறந்த ஆட்சியா?

**ஸ்டிக்கர் அ.தி.மு.க. ஆட்சி!**

உங்கள் கட்சி மாநில துணைத்தலைவர் சசிகலா புஷ்பா "பாராளுமன்றத்தில் ஜெயலலிதாவும் - சசிகலாவும் என்னை அடித்து துவைத்தார்கள். முகத்தில் காரித்துப்பினார்கள். தங்களது செருப்பால் என் முகத்தில் அடித்து, ரத்தகாயமே வந்ததாக" சாட்சியங்களுடன் அழுதாரே அதுதான் சிறந்த நிர்வாகமா ஜி?

சமச்சீர் கொள்கை கொண்ட தமிழக அரசின் பாடப்புத்தகத்தின் பின் பக்க அட்டைப்படத்தில் வள்ளுவன் படம் இருந்தற்காக ரூ.1000 கோடி பாழானாலும் பரவாயில்லை என கிழித்துப்போட்ட ஜெயலலிதா நிர்வாகம் சிறந்ததா ஜி. ஒராண்டு மட்டுமே ஆட்சிக்கு பாக்கி நாட்கள் இருக்கும்போது மூன்று ஆண்டுக்கு புத்தகப்பை ஆர்டர் போட்டு வைத்து அதில் "ஜெ " படம் எடப்பாடி படம் இருந்தாலும் அதை அப்புறப்படுத்தினால் ஆண்டுக்கு ரூ.18 கோடி நஷ்டம் என்பதால் அப்படியே இருக்கட்டும். அந்த காசுக்கு கொரோனாவில் மாத்திரை மருந்து வாங்குவோம் எனச் சொன்ன முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சியை விட ஜெயலலிதா ஆட்சி சிறந்ததா மோடி ஜி.

**பிரதமர் மோடிக்கு மணிப்பூரும், ஜெயலலிதாவும் ஒன்றுதான்!**

ரூ.1000 கோடி போனாலும் பரவாயில்லை. "கலைஞர் தந்தார்" என்பதற்காக புதியதலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக மாற்றினாரே ஜெயலலிதா அதுதான் சிறந்த ஆட்சியா மோடி ஜீ.

அமெரிக்க கிளிண்டன் கிளாரி பாராட்டிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை திருமண மண்டபமாக்க ஜெயலலிதா முயன்றாரே!

இவ்வளவு பேசிய தாங்கள் "யானையும் கூட கால் ஆடும் சேற்று நிலத்தில் அகப்படும்போது நரிகள் கொன்றுவிடும் " என்று எடப்பாடி நியமித்த நீதிபதி ஆறுமுகசாமி கமிஷன் சொன்னதே அடுத்த முறையாவது இங்கு வரும்போது சொல்லுங்கள். ஜெயலலிதாவின் மரணம் எப்படி நிகழ்ந்தது என்று.

இது எல்லாம் சரி. ஆனால் சிறந்த ஆட்சி ஜெயலலிதா தந்ததாக கூறும் தாங்கள், ஜெயலலிதா 75 நாள் அப்பல்லோவில் இருந்தபோது ஒரு நாள் கூட எட்டிப் பார்க்காதது ஏன் ஜீ! மணிப்பூர் மாதிரி ஜெயலலிதாவையும் அன்று மறந்தது ஏன் ஜி?

இவ்வாறு கவிஞர் காசி முத்து மாணிக்கம் கேள்விகளால் துளைத்துள்ளார்.



நெல்லை மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் வைத்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று ரூபாய் 5.35 கோடி மதிப்பில் 1200 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ரூபாய் 26.33 கோடி மதிப்பில் முடிவுற்ற பணிகளையும் ஆக மொத்தம் ரூபாயும் 33 கோடியே 58 லட்சம் மதிப்பில் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், ஞானதிரவியம் எம்.பி.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ மேயர் சரவணன் மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்,துணை மேயர் ராஜ், விஜிலாசத்யானந்த், சுகன்யா,சுரேஷ்,உள்பட பலர் உள்ளனர்.

### மதுராந்தகம் அருகே சாலை விபத்து

# உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி - ஆறுதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 14-

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே சிறுநாகலூர் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அறிவிப்பு வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுநாகலூர் கிராமம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 12.3.2024 அன்று காலை தொழுப்பேடுவிலிருந்து செங்கல்பட்டு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து முன்னால் சென்ற கண்டெய்னர் லாரியை முந்திச்செல்ல முயன்றபோது எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில், பேருந்தில் பயணம் செய்த மதுராந்தகம் தனியார் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் தனுஷ் (வயது 21), த/பெ. முனியப்பன், கமலேஷ் (வயது 19), த/பெ. முருகேசன் மற்றும் மோனிஷ் (வயது 19), த/பெ.சிவகுமார் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் ரவிச்சந்திரன் (வயது 20), த/பெ.குணசேகரன் என்பவர் மதுராந்தகம் அரசுப் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறன். ஈடுசெய்ய முடியாத இந்தப் பேரிழப்பு நம் அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. உயிரிழந்த மாணவர்களின் பெற்றோருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## கோவை - திருப்பூர் - ஈரோடு - நீலகிரி மாவட்டங்களில்

# ரூ.1273.51 கோடி மதிப்பிலான புதிய - முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து 57,325 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

**பொள்ளாச்சி, மார்ச் 14-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 560 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 273 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 489 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் 57,325 பயனாளிகளுக்கு 223 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சியில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர். நடராசன், கே. சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் பொள்ளாச்சியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று காலை சென்னையிலிருந்து விமானம் மூலமாக கோயம்புத்தூர் வந்தடைந்தார். கோயம்புத்தூர் விமான நிலையத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்கள், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் புத்தகங்கள் வழங்கி வரவேற்றனர்.

பின்னர் கோயம்புத்தூரிலிருந்து முதலமைச்சர் அவர்கள் விழா நடைபெறும் பொள்ளாச்சிக்கு சாலை மார்க்கமாகச் சென்றார். கோயம்புத்தூரிலிருந்து பொள்ளாச்சி வரை வழிநெடுகிலும் முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் பொள்ளாச்சியில் நடைபெற்ற அரசு விழாவில்:

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 174 கோடியே 40 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொகுப்பு கோபுரம், உயர்தர அறுவை அரங்கு, டவர் பிளாக்கில் மருத்துவ எரிவாயு குழாய் அமைப்பு மற்றும் வால்பாறை அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், 4 கோடி ரூபாய் செலவில் மேட்டுப்பாளையம் வட்டம், மானார் பகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கான தங்கும் விடுதி, சிங்காநல்லூர் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி;

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் 10 கோடியே 11 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் 160 வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 3 கோடியே 31 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் 21 புதிய நியாய விலைக் கட்டடங்கள்;

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை சார்பில், 13 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் மதுக்கரை வட்டம், குறிச்சி புறநகர் திட்டப் பகுதியில் வணிக வளாகம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 16 கோடியே 69 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில், சுயஉதவிக் குழு கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், 29 புனரமைக்கப்பட்ட சாலைகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 17 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில் நுட்ப மகத்துவ மையம்;

காவல் துறை சார்பில், 1 கோடியே 62 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில், கோவை மாநகர காவலர் பயிற்சிப்பள்ளி வளாகத்தில் மேம்படுத்தப்பட்ட உயர் காவல் அதிகாரிகள் விருந்தினர் மாளிகை மற்றும் காவல்துறை ஓட்டுநர்கள் அறைகள்;

**என மொத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 240 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 65 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில், 34 கோடியே 13 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், சாடிவாயில் கிராமத்தில் புதிய யானைகள் முகாம், சிறுமுகை அருகே வன விலங்குகளுக்கான மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம், கோழிகமுத்தி யானைகள் முகாம் மேம்படுத்தும் பணி, 47 யானை பராமரிப்பு பணியாளர்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் கலாச்சார இணக்கமான வீடுகள் கட்டும் பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நவீன உபகரணங்க ளுடன் கூடிய கூடுதல் நீராவி சலவையகக் கட்டடம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், 318 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதியான சின்ன வேடம்பட்டி, சரவணம்பட்டி (பகுதி) மற்றும் வெள்ளக்கிணறு பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 19 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்;

எரிசக்தித்துறை சார்பில், 89 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், வால்பாறை நகராட்சியில் சாலை மேம்பாட்டுப் பணிகள்;

காவல்துறை சார்பில், 53 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் நகரில் காந்திபுரத்தில் அமையவுள்ள 20 உதவி ஆணையர், 40 ஆய்வாளர் மற்றும் 80 உதவி ஆய்வாளர் அடுக்கு மாடி குடியிருப்புகள்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறு வனங்கள் துறை சார்பில், 19 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காளப்பட்டி சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் தென்னை நார் சார்ந்த பொருட்கள் பரிசோதனைக்கூடம், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் இரண்டு மற்றும் மூன்று சக்கர மின் வாகனங்களில் பொருந்தும் மோட்டார்களுக்கான பரிசோதனைக்கூடம், மாவட்ட தொழில் மைய ஏற்றுமதி ஊக்குவிப்பு மையத்தை மேம்படுத்தும் பணி;

**என மொத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 448 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள் விவரம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் அறுவடைக்குப் பின்சார் தொழில் நுட்ப இயந்திரம், சூரிய கூடார உலர்த்தி மற்றும் மின் மோட்டார், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் தமிழ்நாடு நீர்பாசன வேளாண் நவீன மயமாக்கல் திட்டம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம் உயர்தர அச்சு வெல்லம் தயாரிப்பு மையம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், உழவர் சந்தை அடையாள அட்டைகள் வழங்குதல், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம், பிரதம மந்திரி நுண்ணுயிர் பாசனத் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் ஒருங்கிணைந்த பண்ணையம், உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்க செயல் விளக்கம், வேளாண் உபகரண தொகுப்பு, தார்பாலின், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் அங்கக வேளாண்மை தொகுப்பு, தெளிப்பான், மரக்கன்றுகள், தென்னை புதிய நடவு செயல் விளக்கம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம், ஊட்டச்சத்துமிக்க சிறுதானிய சோளம் செயல் விளக்கம், தென்னை வளர்ச்சி வாரிய திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், தேசிய எண்ணெய் வித்து இயக்கத்தில் நிலக்கடலை செயல்விளக்கம், ஊட்டச்சத்துமிக்க சிறுதானிய கம்பு கேழ்வரகு செயல்விளக்கம் போன்ற திட்டங்களின் கீழ் உதவிகள்;

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரியின் உணவு சார்ந்த குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்க ளுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் போன்ற திட்டங்களில் உதவிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மகளிர் திட்டம்) சார்பில், வங்கிக் கடன் இணைப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் பெரிய நாயக்கன்பாளையம் மற்றும் சிக்கதா சம்பாளையம் திட்டப் பகுதிகளில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்குதல், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், பயிர் கடன், கால்நடை பராமரிப்புக் கடன், சுய உதவிக் குழுக்கடன் வழங்குதல், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் மீன்பிடி வலை வழங்குதல், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய மீன்வளர்ப்பு குளம் அமைத்திட உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்கள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் இபட்டாக்கள் வழங்குதல், தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சமூக பொருளாதார அதிகாரமளித்து வனம் உண்டாக்க தொழில் முனைவோர் திட்டத்தில் உதவிகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் உதவி வழங்குதல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவ காப்பீட்டு அட்டைகள் வழங்குதல்;

**என மொத்தம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 19,329 பயனாளிகளுக்கு 127 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.**

**திருப்பூர் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்**

நெடுஞ்சாலைத் துறை சார்பில், 115 கோடி ரூபாய் செலவில் பல்லடம் - தாராபுரம் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்கப்பட்ட பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 60 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாநகராட்சி சுகாதார நிலையக் கட்டடம்;

பொதுப்பணித் துறை சார்பில், 9 கோடி ரூபாய் செலவில் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் புதிய கூடுதல் கட்டடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 45 கோடியே 11 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில் குழந்தைகள் நேய பள்ளி உட்கட்ட மைப்புத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், திருப்பூர் மாவட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் முடிவுற்ற 70 தார் சாலைப் பணிகள்;

**என மொத்தம் திருப்பூர் மாவட்டத்தில் 169 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் 79 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**திருப்பூர் மாவட்டத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தாராபுரம் மற்றும் காங்கயம் பகுதிகளில் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமுருகன் பூண்டி நகராட்சியில் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் மற்றும் வள மீட்பு மையம் அமைக்கும் பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 7 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூலனூர் வட்டாரத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகள்;

**என மொத்தம் திருப்பூர் மாவட்டத்தில் 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 புதியத் திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மகளிர் திட்டம்) சார்பில், சுய உதவிக்குழு கடன், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் நுண் நிறுவன நிதி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் பயிர் கடன், கால்நடை பரா மரிப்பு கடன், மத்திய காலக் கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன், மாற்றுத் திறனாளி கடன், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 50 சதவீத மானியத்தில் மீன் பிடி வலைகள் வழங்கும் திட்டம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டு அட்டைகள் வழங்குதல்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தாட்கோ சார்பில் தொழில் முனைவோர் திட்டம், இளைஞர்க ளுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் உதவிகள், வன உரிமைப் பட்டா, இலவச தையல் இயந்திரம், ஆதிதிராவிடர் மனைப் பட்டா வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் சிறப்பு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்குதல்;

தொழிலாளர் நலத் துறை சார்பில் கல்வி உதவித்தொகை, விபத்து நிதியுதவி, மரண உதவித் தொகை மற்றும் ஓய்வூதியம் வழங்குதல், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், நுண்ணீர் பாசனத் திட்டம், தென்னை மேம்பாட்டு திட்டம் மற்றும் ரொட்டவேட்டர் வழங்குதல், மரசெக்கு இயந்திரம், டிராக்டர். சூரிய கூடார உலர்த்தி, எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம், வெங்காய சேமிப்பு கட்டமைப்பு, நீர் சேமிப்பு கட்டமைப்பு மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் கூடம் அமைக்க நிதியுதவி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், இலவச நத்தம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கடன் ஒப்புதல் ஆணைகள் வழங்குதல்;

**என மொத்தம் திருப்பூர் மாவட்டத்தில் 7,503 பயனாளி களுக்கு 26 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

**ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 78 கோடியே 89 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் பொது சுகாதார ஆய்வகம், நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகம், துணை சுகா தார நிலையம், பவானி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ஈரோடு அரசு தலைமை மருத்துவ மனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்தி 8 தளங்கள் கொண்ட பல்நோக்கு மருத்துவ மனைக் கட்டடம், கோபி செட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கான பராமரிப்பு மையம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் பயன்பாட்டிற்காக சி.டி.ஸ்கேன் உபகரணம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 12 கோடியே 5 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் பவானி அரசு விதைப்பண்ணை யில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், சிவகிரி, நம்பியூர், தாளவாடி, பர்கூர் ஆகிய இடங்களிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சேமிப்பு கிடங்குகள், குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள்;

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், 10 கோடியே 94 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பெருந்துறை வட்டம், வடமுகம், வெள்ளோடு கிராமம், வெள்ளோடு - ஓலப்பாளையம் திட்டப்பகுதியில் கட்டப்பட்டுள்ள 120 அடுக்கு மாடி குடியிருப்புகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 19 கோடியே 46 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் அங்கன்வாடி கட்டடங்கள், வேளாண்மை கிடங்குகள், நியாய விலைக்கடைகள், 57 சாலை மேம்பாட்டுப் பணிகள்;

காவல் துறை சார்பில், 1 கோடியே 8 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில், ஈரோடு நகர உட்கோட்ட துணை காவல் துணை கண்காணிப்பாளர் குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகம்;

**என மொத்தம் ஈரோடு மாவட்டத்தில் 122 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் 86 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**ஈரோடு மாவட்டத்தில் புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டுதல்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தியூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிய கூடுதல் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சித்தோடு பகுதியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மஞ்சள் ஏற்றுமதி மையம்;

பால்வளத் துறை சார்பில் 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சத்தியமங்கலத்தில் கட்டு ஊறுகாய் புல் தயாரிக்கும் அலகு;

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில், 70 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பவானி நகர், செல்லி யாண்டியம்மன் திருக்கோயில் புதிய மரத்தேர் திருப்பணி, அந்தியூர் நகர், செல்லீஸ்வரர் திருக்கோயில் கல்தரைத்தளம் அமைக்கும் பணி மற்றும் ஈரோடு, பெரியார் நகர், கருப்பண்ணசாமி திருக்கோயிலில் ஈரோடு சரக ஆய்வாளர் அலுவலகம் கட்டும் பணி;

**என மொத்தம் ஈரோடு மாவட்டத்தில் 22 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரம்**

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் வேளாண் தொழில் முனைவோர், வேளாண்மை இயந்திரமயமாக்குதலின் உப இயக்கம், தேசிய எண்ணெய் வித்து மரப்பயிர்கள் இயக்கம் ஆகிய இயக்கத்தின் கீழ் உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களில் உதவிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பட்டாக்கள் வழங்குதல், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் கல்வி மற்றும் திருமண உதவித் தொகை, ஓய்வூதியம், கண் கண்ணாடிக்கான உதவித் தொகை மற்றும் நலவாரிய அட்டைகள் வழங்குதல்;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், உள்நாட்டு மீனவர்களுக்கு 50 சதவிகித மானியத்தில் மீன்பிடி வலைகள் வழங்கும் திட்டத்தில் நிதியுதவி, சமூக பாதுகாப்பு துறை - மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் நிதி ஆதரவு திட்டத்தில் உதவிகள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமம், வெள்ளோடு - ஓலப்பாளையம் திட்டப்பகுதியில் 120 அடுக்குமாடி குடியிருப்பில் பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்குதல்;

**என மொத்தம் ஈரோடு மாவட்டத்தில் 3,156 பயனாளிகளுக்கு ரூ.25 கோடியே 83 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

**நீலகிரி மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 15 கோடியே 94 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவில், சமுதாய கூடங்கள், வேளாண் பொருட்கள் சேமிப்பு கிடங்குகள், பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், பல்நோக்கு கட்டடங்கள், சாலைப் பணிகள், பொது விநியோக கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், வேளாண் பொருட்கள் சேமிப்பு கிடங்குகள், அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில், 6 கோடியே 31 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில், உதகை ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதி, உப்பட்டி அரசு தொழிற்பயிற்சி நிலைய பழங்குடியினர் நல மாணவியர் விடுதி, தேவர் சோலையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை, கரிக்கையூரில் தலைமையா சிரியர் குடியிருப்புக் கட்டடம்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், 25 இலட்சம் ரூபாய் செலவில் கிராம சுகாதார நல மையக் கட்டடம்;

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், 4 கோடியே 60 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் அணிக்கொரை, கக்குச்சி, கொளப்பள்ளி போன்ற இடங்களில் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்கள், குருத்துக்குளி கால்நடை பண்ணை, கோத்தகிரி, மிளிதேன் அரசு மேல் நிலைப்பள்ளியில் கணினி அறை மற்றும் கணினி அறையுடன் கூடிய அறிவியல் ஆய்வகம்;

**என மொத்தம் நீலகிரி மாவட்டத்தில் 27 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 43 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**நீலகிரி மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், 1 கோடியே 19 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அதிகரட்டியில் கால்நடை மருந்தகம் கட்டும் பணி மற்றும் குன்னூர், கேத்தியில் கிளை நூலகக் கட்டடம் கட்டும் பணி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நெல்லியாளம் நகராட்சிக்கு உட்பட்ட பந்தலூர் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்துதல் மற்றும் கூடுதல் கட்டடம் கட்டும் பணி;

**என மொத்தம் நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 புதியத் திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரம்**

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், தையல் இயந்திரங்கள், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் மூன்று சக்கர வாகனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் மாவட்டத் தொழில் மையத்தின் கீழ், கேரட் வாஷிங் யூனிட், சாக்லெட் மூலப் பொருட்கள், டிஷ்யூ காகிதம் உற்பத்தி, தானியங்கி கான்கிரீட் கலவை இயந்திரம், சாக்லெட் உற்பத்தி, போட்டோ ஸ்டுடியோ, சுற்றுலா வாகனம், டிப்பர் லாரி, டிபார்ட்மெண்டல் ஸ்டோர் போன்ற தொழில்கள் தொடங்கிட உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், பிரதம மந்திரி ஜன்மான் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்குதல். சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில் தெப்பக்காடு யானைகள் முகாம் பணியாளர்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த கலாச்சார இணக்கமான வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்குதல், சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலை ஊக்கத் தொகை வழங்குதல், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு வழங்குதல்;

**என மொத்தம் நீலகிரி மாவட்டத்தில் 27,337 பயனாளிகளுக்கு ரூ.43 கோடியே 79 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட பயனாளிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, பி.ஆர்.நடராசன், கே.சண்முகசுந்தரம், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் எம். கோவிந்த ராவ், மற்றும் மருத்துவத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட, கோட்டைப்பட்டி கிராமத்தில் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 4 கோடி மதிப்பீட்டில், மாணவர்கள் பயன்பெறும் வகையில் 3 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பூங்காவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் .



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியம், நாரணமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட, மருதடி கிராமத்திற்கு, பெரம்பலூரில் இருந்து செட்டிக்குளம் செல்லும் அரசுப் பேருந்தை, பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பேருந்து சேவை நீட்டிப்பை சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், அரசுப் பேருந்தில் பொதுமக்களுடன் பயணம் செய்தார். இந்த நிகழ்ச்சியில், அரசுப் போக்குவரத்துக் கிளை மேலாளர் ராஜா, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், தொ.மு.ச. மாவட்டகவுன்சில் பேரவை தலைவர் கே.கே.எம்.குமார், மாவட்டப் பொருளாளர் சங்கர், நாரணமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பத்மாவதி சந்திரன், மற்றும் ஞானசுந்தரம் , விஜயகுமார், சீனிவாசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### வீட்டு மனைப் பட்டா பெற்றவர்களுக்கு

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள்!

## சேலம் விழாவில் அமைச்சர் கே.என். நேரு தகவல்!

சேலம், மார்ச் 14-

முதலமைச்சர் அவர்களின் அனைத்துத் திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்தை நோக்கியே உள்ளன.

வீட்டுமனைப் பட்டா பெற்ற தகுதியானவர்களில்

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித்தரப்படும் என

ரூ.19.49 கோடி மதிப்பீட்டில் 3,197 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேரு தெரிவித்தார்.

சேலம், சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் (12.03.2024) நடைபெற்ற அரசு விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் ரூ.19.49 கோடி மதிப்பீட்டில் சேலம், மேட்டூர், சங்ககிரி மற்றும் ஆத்தூர் ஆகிய வருவாய் கோட்டங்களுக்குட்பட்ட 3,197 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றதிலிருந்து வருவாய்த்துறையின் சார்பில் தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது. அதன்தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் உள்ள 4 வருவாய் கோட்டங்களுக்கும் உட்பட்ட பகுதிகளில் தகுதியான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, இன்றையதினம் வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களில் தகுதியானவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பான திட்டங்களில் ஒன்றான "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் பெறப்பட்ட தகுதியான மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணப்படுகிறது. இதுமட்டுமல்லாமல், பொது மக்களின் குறைகளைக் கேட்டறியும் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் மூலம் பொது மக்களின் பகுதிகளுக்கே நேரடியாகச் சென்று குறைகள் கேட்டறிப்பட்டு, தீர்வு காணப்பட்டு வருகிறது. "நீங்கள் நலமா" என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்து, நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் தொலைபேசி வாயிலாக உரையாடினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அனைத்துத் திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்தை நோக்கியே உள்ளன. குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 1.15 கோடி மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு மாநிலங்களில் இத்திட்டத்தினை வரவேற்கிறார்கள்.

சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டுவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்து ஒடிசா மாநிலத்திலிருந்து அலுவலர்கள் வருகைபுரிந்து நாள்தோறும் விதவிதமான மற்றும் சத்தான உணவு தயாரிக்கும் முறைகள் குறித்து பார்வையிட்டுச் செல்லும் வகையில் மிகச்



சிறந்த ஆட்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், இன்றையதினம் அனைத்து வருவாய் கோட்டங்களிலிருந்தும் வீட்டுமனைப் பட்டாக்களை பெறும் பயனாளிகளை சிறந்த முறையில் அழைத்துவந்துள்ள வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோருக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவிப்பதுடன், இந்த அரசு எப்பொழுதும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் சிறந்த முறையில் இதனைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வில் மென்மேலும் முன்னேற வேண்டும். இவ்வாறு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்கள்.

இன்றைய தினம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 3,197 பயனாளிகளுக்கு ரூ.19.49 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 475 நபர்களுக்கு ரூ.2.25 கோடி மதிப்பிலான மாற்றுத்திறனாளிகள் நல உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சேலம் மாநகராட்சியின் சார்பில் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.2.15 கோடி மதிப்பிலான 12 புதிய டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்களும், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ், மாநகராட்சியின் பங்களிப்புடன் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் 36 மாநகராட்சி நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகளுக்கான ஆணை என மொத்தம் 3,708 பயனாளிகளுக்கு ரூ.26.89 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு வழங்கினார்கள்.

இதனைத்தொடர்ந்து, சேலம், இரயில்வே சந்திப்பு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சேலம் கோட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மகாபலிபுரத்திற்கு ஒரு புறநகரப் பேருந்தும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு அடிவாரத்திற்கு 2 சாதாரண கட்டண நகரப் பேருந்துகளும் என மொத்தம் 3 புதிய வழித்தடங்களில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பேருந்து சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி. மா.சாரதாதேவி, மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, வருவாய் கோட்டாட்சியர்கள் அம்பாயிரநாதன், திருமதி ந. லோகநாயகி, செல்வி.தா. பிரியதர்ஷினி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி அ. மயில், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எஸ். டி.கலை அமுதன், மாமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், சோனா கல்லூரி தாளாளர் வள்ளியப்பா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அளவிலான கபடி போட்டி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர். தங்கபாண்டியன் ஏற்பாட்டில், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் பிரண்ட்ஸ் டி.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு சுழல் கோப்பை மற்றும் பரிசு தொகையினை வழங்கினார். இதில் பேரூர் கழக பொறுப்பாளர் ந. சண்முகம், ஒன்றிய கழகச் செயலாளர் சித்தார்த்தன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஏற்காடு ரமேஷ் பாபு, மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத. ராஜசேகர், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு அணி அமைப்பாளர் சையது சாவலி, நகர துணை செயலாளர் கலிவரதன், பேரூர் மன்ற கவுன்சிலர்கள் நடராஜன், திருச்செல்வம், ரமேஷ், நித்தியா செந்தில்குமார், செந்தில், சமீனா பேகம், காவியா சேகர், டெல்லி (ஏ)ராஜகோபால், பெருமாள், சந்ரு, முரளி, வித்தியாசாகர், சதீஷ் ,வெங்கடேசன், ராபின், ரவி, இளைஞர் அணி வினோத், கண்ணன், அஷென்பாசா, மஜார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற

# முதல்வர் மு.க.ஸ்டாலினை கண்டு பிரதமர் மோடி நடுங்குகிறார்!

## மரக்காணம் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் செஞ்சி மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், மார்ச் 14-

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் கண்டு பிரதமர் மோடி நடுங்குவதாக மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் BLA 2, BLCமுகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஓமந்தூரில் நடைபெற்றது.

மரக்காணம் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் குமார் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, முருகன், ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மரக்காணம் ஒன்றிய துணைபெருந்தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளருமான பழனி அனைவரையும் வரவேற்றார்.

செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் உயர்கல்வியில் 52 சதவீதம்பெற்றுள்ளோம். ஆனால் பிரதமர் மோடி முதலமைச்சராக இருந்த குஜராத் மாநிலத்தில் உயர் கல்வி நிலை வெறும் 24 சதவீதம் தான் உள்ளது.

மோடி ஆட்சி செய்கின்ற மாநிலத்தில் கூட உயர்கல்வியை உயர்த்த முடியவில்லை என குற்றம் சாட்டிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற முதலமைச்சரை கண்டு பிரதமர் மோடி நடுங்குகிறார் அதனால் தான் தமிழ்நாட்டிற்கு என்றைக்கும் இல்லாத அளவிற்கு மூன்று மாதத்தில் அடிக்கடி வந்து சென்று மக்களை ஏமாற்றி வருகிறார்.

தேர்தலின் போது தமிழ்நாட்டில் உள்ள மகளிர்களுக்கு உரிமை தொகை ஆயிரம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

இதை வழங்கக்கூடாது, இலவச திட்டங்கள் கொடுக்கக் கூடாது என்று சொன்ன பிரதமர் மோடி தமிழ்நாட்டை பார்த்து,முதலமைச்சரின் திட்டங்களை பார்த்து அவர் காப்பி அடித்து மற்றொரு மாநிலத்தில் பி.ஜே.பி. கட்சிவெற்றி பெற வேண்டும் என்பதற்காக தேர்தல் வாக்குறுதி கொடுத்து தமிழ்நாட்டை வஞ்சித்தவர் பிரதமர் மோடி.

தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக இரவு பகல் பாராமல் தமிழ்நாட்டு மக்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் உழைத்து வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.



தொடர்ந்து செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற ஒன்றியத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள், BLA 2,

BLC,மற்றும் கழக நிர்வாகிகள் என 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

கூட்டத்தில்.தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வதுபிறந்த நாளை முன்னிட்டு மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள 22 ஊராட்சிகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது, தொடர்ந்து 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது ,அனைத்து ஊராட்சிகளிலும் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரத்தை மேற்கொண்டும்,

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் முதலமைச்சர் அறிவிக்கும் வேட்பாளர்க்கு தீவிரமாக பணியாற்றி அவரை வெற்றி பெற செய்வது,உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர்விஜயன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை,ஒன்றிய கவுன்சிலர்கள் அமுதா கிருஷ்ணமூர்த்தி, கன்னியம்மாள், நாகஜோதி கணேஷ், திருநாவுக்கரசு, மகாலட்சுமி காளிதாஸ், விநாயகம், தேசம் பாலா, தேவி ராஜதுரை, துர்கா தேவி கலைஞர், விஜயா பெருமாள்.

நிர்வாகிகள் வடிவேல், செந்தில்குமார், ராஜாங்கம், ரவிச்சந்திரன், செந்தாமரை, கதிர்வேல், கிருஷ்ணமூர்த்தி, வேலாயுதம், கன்னியப்பன், மாரி, ஐ. கே .எஸ் .ஆறுமுகம், சிவகுமார், அய்யனார், எழிலரசன், ரவி, சசிகுமார், முனுசாமி, தர்ம கொடி. செல்லக்கண்ணு, ராஜகோபால், அரங்கநாதன், அருமைச் செல்வன், பாலசுந்தரம், கிருஷ்ணன், முருகம்மாள் ,பாலு, வளர்மதி, சேகர், பிரகாஷ், கோபி, வெங்கட், ராஜா, பெரியசாமி, ராதாகிருஷ்ணன், மேஸ்திரி ஏழுமலை, சங்கர், மல்லிகா முருகன், கமலா முருகன், ஆதிமூலம், நாகராஜன், முத்துக்குமரன், அவ்வைசேகர், முருகன், ஓமந்தூர் கிளை நிர்வாகிகள் மணிகண்டன், ராஜாராமன், சம்பத், நாகராஜ், ஜெயபால் ,மூர்த்தி, குமார், செல்வம், நரசிம்மலு, சுரேந்த்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஓமந்தூர் கிளை கழக செயலாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

### ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில்

# 197 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்

கள்ளக்குறிச்சி மார்ச் 14-

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டு ஊராட்சியில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதற்கு கோட்டாட்சியர் லூர்து சாமி,தாசில்தார் குமரன்,ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் அசோக் குமார்,பெருமாள், துரைமுருகன்,ஒன்றிய குழு துணை தலைவர்கள் சென்னம்மாள், அண்ணாதுரை,அஞ்சலை கோவிந்தராஜ்,மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா தாஸ் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 197 பேருக்கு ரூபாய் 1 கோடியே 11 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் நமது தமிழக அரசு மக்களுக்கான அரசாக செயல்பட்டு வருகிறது, எனவே பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக எழுதி அதிகாரிகளிடம் வழங்குங்கள் அதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்படும்,மேலும் தமிழக முதல்வர்,கழக தலைவர்,சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் ஆட்சி புரியும் முதல்வருக்கு எல்லாம் முதல்வராக முன் மாதிரியாக திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக நடத்தி வருகிறார், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் அரசின் கொள்கையாகும்,கடந்த 10 ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் நடைபெற்ற வளர்ச்சி பணிகளை விட கடந்த இரண்டரை ஆண்டுகளில் 200 மடங்கு கூடுதலாக வளர்ச்சி திட்ட பணிகளும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன,எனவே இதில் பயன் பெறும் பயனாளிகள் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க.வுக்கும் தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்கும் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் அர்ச்சனா காமராஜன், ஷீலா ராஜேந்திரன்,பரமசிவம் பிலோமினால்,இருதயராஜ்,ஒன்றிய கவுன்சிலர்கள் விமலா பாண்டுரங்கன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விஜய் ஆனந்த் மற்றும் அரசு அதிகாரிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம் புதுப்பட்டு ஊராட்சியில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது,இதற்கு கோட்டாட்சியர் லூர்துசாமி, தாசில்தார் குமரன், ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் அசோக் குமார்,பெருமாள், துரைமுருகன், ஒன்றிய குழு துணை தலைவர்கள் சென்னம்மாள், அண்ணாதுரை,அஞ்சலை கோவிந்தராஜ்,மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர், ஊராட்சி மன்ற தலைவர் சித்ரா தாஸ் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 197 பேருக்கு ரூபாய் 1 கோடியே 11 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார், இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



கடலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (12.03.2024) 15வது மான்ய நிதிக்குழு திட்டத்தின் கீழ் குறிஞ்சிப்பாடி, அண்ணாமலைநகர், புவனகிரி, கிள்ளை மற்றும் சேத்தியாத்தோப்பு பேரூராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு பொது சுகாதார வாகனங்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### ஜி.பி.ராஜா – இன்பா ஏ.என்.ரகு தலைமையில்

# மதுரை மாநகர் இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு!

## கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை! பொன்.முத்துராமலிங்கம் -வ.வேலுசாமி -பெ.குழந்தை வேலு பங்கேற்பு!

*மதுரை, மார்ச் 14-*

மதுரை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் துணை அமைப்பாளர் சி.அய்யப்பன் ஏற்பாட்டில் திராவிட மாடல் ஆட்சி நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழகக் கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூலகம் திறந்து வைத்து மாநில இளைஞர் அணி மாநாடு தீர்மானம் விளக்கி, ஆயிரம் பேருக்கு இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என். ரகு தலைமையில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் கழக நிர்வாகிகள் பொன்.முத்துராம லிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தை வேலு பங்கேற்று வாழ்த்தி பேசினார்கள். அதன் விபரம்:-

மதுரை மாநகர் மாவட்ட இளைஞரணி சார்பாக கூடல் நகரில் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என். ரகு தலைமை வகித்தார்கள்.

மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.சௌந்தரராஜன் வரவேற்று பேசினார். முன்னாள் அமைச்சர், கழக உயர்மட்ட செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தை வேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், கே.தனசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்புமிக்க இக்கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றி, கழக கொடியேற்றி, இனிப்புகள் வழங்கினார்.

மேலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகத்தையும் திறந்து வைத்தார். சிறப்புமிக்க கூட்டத்தினை மாநகர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.ஐயப்பன் ஏற்பாடு செய்திருந்தார்.

மேலும் இக்கூட்டத்தில் அவைத் தலைவர் ம.ஒச்சுபாலு, மாவட்ட துணைச் செயலாளர் சி.சின்னம்மாள், மாநில அணி பி.பாக்கியநாதன், பகுதி செயலாளர் எஸ்.எஸ்.மாறன், ஒன்றிய செயலாளர் ஆர்.கே. ஜெயராமன், பேரூர் செயலாளர் ராஜாமணி, கழக நிர்வாகிகள் சு.பா. கண்ணன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொது மக்கள் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அன்புச்செல்வன், தினேஷ் குமார், தமிழ் சந்திரன், ராம் பிரசாத், ராஜபாண்டி, சுந்தரேஸ்வரன் ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

### திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றிய பகுதிகளில்

# ரூ.46.00 இலட்சம் மதிப்பில் சாலை பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

*திருப்பபூர், மார்ச் 14-*

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், கொடுவாய் ஆர்.வி.எல். திருமண மண்டபத்தில் 08.03.2024 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் தலைமையில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாகளையும், 75 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளையும், 219 பயனாளி களுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகள், 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டத்சத்து நலப் பெட்டகம், 10 பயனாளிகளுக்கு மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருத்து பெட்டகம் என மொத்தம் 334 பயனாளிகளுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி, குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.30.00 மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்து, பெருமாள்பாளையம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறத்தொழுவு தீத்தான்வலசு சாலையிலிருந்து தென்னங்கரை பாளையம் வழியாக கொத்தனூர் வரை செல்லும் மண் சாலையை அடுக்கு காப்பி சாலையாக அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, குண்டடம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சிவ.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் ராசு (எ)கிருஷ்ணசாமி, பொருளாளர் நல்லசாமி, துணைச் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன்,

ஊதியூர் பெரியசாமி, மாவட்ட பிரதிநிதிகள் துரைசாமி, தேவராசு, மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர்கள் மணி, நந்தகுமார், பிஏபி பகிர்மான குழுத்தலைவர் கண்ணன்(எ)தெய்வசிகாமணி, பெருமாள்பாளையம் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் நந்தகுமார், காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுரேஷ்குமார், விஜயகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள்

# BLA2, தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் - நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*கிருஷ்ணகிரி, மார்ச் 14-*

கிருஷ்ணகிரிமேற்குமாவட்டக் கழகச் செயலாளர் ஒய். பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஒசூர், தளி மற்றும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதியை சார்ந்த மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதியை சார்ந்த வாக்குசாவடி ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, தொகுதி பொறுப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

இன்று (14.03.2024) காலை 9 மணி - SAS திருமண மண்டபம் - சூளகிரி- வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி, காலை11 மணி- சப்தகிரி-திருமண மண்டபம்-தேன்கனிக்கோட்டை -தளி சட்டமன்ற தொகுதி, மாலை 3 மணி-மீரா மஹால் ஒசூர்-ஒசூர் சட்டமன்ற தொகுதி. எனவே மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அந்தந்த மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை நகராட்சி, கலைஞர் நூற்றாண்டு பூங்காவில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல்தடுப்புசட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சிரம்யா, தலைமையில் 11.03.2024 அன்று திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திருமதி. திலகவதி செந்தில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.க.பிரேமலதா, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதல்வர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் சத்திரக்குடி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம் போகலூர் இராமநாதபுரம் இணைந்து நடத்தும் தன்னார்வ இரத்ததான முகாமில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் போகலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கதிரவன், போகலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் குணசேகரன், கே கே ராமச்சந்திரன், செவ்வூர் ஊராட்சி மன்ற தலைவர் சின்னாள், போகலூர் வட்டார மருத்துவ அலுவலர் கார்த்திக், இராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவர் அஸ்வின், இராமநாதபுரம் ரத்த வங்கி மருத்துவர் ஸ்ரீதேவி ராய், டிரஸ்ட் மாவட்ட தலைவர் ராஜீவ் காந்தி, துணைத் தலைவர் சரத்குமார், மாவட்ட செயலாளர் கமல்நாத், பொருளாளர் மணி மற்றும் மருத்துவ அலுவலர்கள் பொதுமக்கள் ரத்ததானம் வழங்கி கலந்து கொண்டனர். இதற்கு முன்னதாக பரமக்குடி வட்டம் கலையூர் கிராமத்தில் 63 கே.வி, புதிய மின்மாற்றியை துவக்கி வைத்தார்,

### மணலி மண்டலத்தில்

# ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

*சென்னை, மார்ச் 14-*

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு - 15 இடையன்சாவடி, வார்டு - 16, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்கண்ட பகுதிகளில் 72.77 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 500 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 22.65 கி.மீ. நீளத்திற்கு 150 மி.மீ முதல் 700 மி.மீ. விட்டமுடைய கழிவுநீர் விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 10.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2921 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 3 துணை உந்து நிலையங்கள், 8 சாலையோர உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 5.61 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், இடையன்சாவடி, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் உள்ள 262 தெருக்களில் 4000 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 46,730 பொதுமக்கள் பயன் பெறுவர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு

# அரசின் மக்கள் நலத்திட்டங்களை விளக்கும் புகைப்படக் கண்காட்சி

## பெரம்பலூர் நகராட்சித் திடலில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கிவைத்தார்!

*பெரம்பலூர், மார்ச் 14-*

பெரம்பலூர் நகராட்சித் திடலில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று இரண்டரை ஆண்டு ஆனதை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் ஏழை எளிய மக்களின் தேவைகளை அறிந்து செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விளக்கிடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்தப் புகைப்படக் கண்காட்சி ஒருவார காலத்திற்கு தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய புகைப்படங்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை என பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட வரும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா, மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தயாரித்த உணவுப்பொருட்கள், மூலிகைத் தேநீர் பொடி உள்ளிட்ட பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது. அரசுத்துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

குறிப்பாக இந்தக் கண்காட்சியில் "முதலமைச்சருன் சுய புகைப்படம்" (sefi with CM) என்ற தலைப்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தின் அருகில் நின்று போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். புகைப்படக்கண்காட்சியினை பார்வையிட வந்த பொதுமக்களும், சிறுவர் சிறுமியர்களும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத் தின் அருகில் நின்று ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வில் வருவாய்த் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணைகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் தலா ரூ.1.40லட்சம் மதிப்பிலான ரொட்டோ வேட்டர் வேளாண் கருவிகளை 5 நபர்களுக்கும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் ரூ.18 லட்சம் மதிப்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தின் மூலம் வேளாண் கருவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் தலா ரூ.87,500 வீதம் வெங்காய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள், மூன்று சக்கர வண்டிகள் என மொத்தம் 40 பயனாளிகளுக்கு ரூ.52.30 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

இதில்,

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்யாம்ளா தேவி, மாவட்ட ஊரக பெரம்பலூர் நகர் மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), ஏ. எஸ்.ஜாஹிர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), பாக்கிய லட்சுமி செங்குட்டுவன் (பூலாம்பாடி), வள்ளியம்மை ரவிச்சந்திரன் (அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், நகர்மன்ற துணைத் தலைவர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் மருத்துவர் அ. கருணாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறை விஜயா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், மாக.அலெக்சாண்டர், எஸ்.செல்வமணி, தஞ்சை மண்டல பொறுப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருக்கோஷ்டியூர் ஊராட்சி, ஊத்துப்பட்டி கிராமத்தில் 11.03.2024 அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் 2020–2021ன் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சண்முகவடிவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.



சேலம், சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் (12.03.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 3,197 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி ஆகியோர் உள்ளனர்.

### திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சியில

# ரூ.2.57 கோடியில் முடிவுற்ற 20 திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. மார்ச் 14.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் ரூபாய் 2 கோடியே 57 லட்சம் மதிப்பிலான முடிவுற்ற 20 திட்டப் பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் மக்களுக்கு அர்ப்பணித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி காட்டம்பூரில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 12.30 லட்சம் மதிப்பிலான நியாய விலை கடை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு மகாத்மா காந்தி திட்டத்தின் கீழ் 10 லட்சத்து 93ஆயிரம் மதிப்பில் அங்கன்வாடி மையம், திருக்கோஷ்டியூர் ஊராட்சியில் ரூபாய் 10 லட்சத்து 19 ஆயிரம் மதிப்புள்ள அங்கன்வாடி மையம்,

சுண்ணாம் பிருப்பு ஊராட்சியில் ரூபாய் 23.57 லட்சத்தில் புதிய ஊராட்சி கட்டிடம் ஊராட்சி மற்றும் விரிவான பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 17.32 லட்சத்தில் கூடுதல் வகுப்பறை பள்ளி கட்டடங்கள், மணமேல்ப்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி மேம்பாட்டுதிட்டத்தில் 6 லட்சத்தில் பயணியர் நிழற்குடை, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய்14.31 மதிப்பில் அங்கன்வாடி மையம்,நெடுமறம் ஊராட்சி ஊர்குளத்தான் பட்டியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் ரூபாய் 9 . 77 லட்சத்தில் மதிப்பிலான நியாய விலை கடை,தி.புதுப்பட்டியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 55 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான மருதாண்டி ஊரணி சீரமைப்பு,

உடையநாதபுரம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7.50 இலட்சத்தில் கலையரங்கம், கே. வைரவன் பட்டி ஊராட்சி மெய்யப்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி மேம்பாட்டுதிட்டத்தில் ரூபாய்8.50 மதிப்பிலான நாடக மேடை, கண்டவராயன் பட்டியில்சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூபாய் 6 லட்சம் மதிப்பிலான பயணியர் நிழற் குடை, கே.மகிபாலன் பட்டி ஊராட்சி நெல் மேனிபட்டியில் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி ரூபாய் 6 லட்சம் மதிப்பிலான பயணியர் நிழற்குடை ,மார் கண்டேயன்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடை,

ஆவணி பட்டியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூபாய் 13 லட்சத்து 57 மதிப்பிலான அங்கன்வாடி மையம் ரூபாய் 9.13 லட்சத்தில்நியாயவிலைக்கடை, தெற்குஇளையாத்தன்குடி ஊராட்சி முத்தூரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 11.97 மதிப்பிலான அங்கன்வாடி மையம், வடக்குஇளையாத்தன்குடி ஊராட்சி அச்சரம் பட்டியில் ருபாய் 8.50லட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின்முலம் கட்டப்பட்ட நாடக மேடை,

கீழச்செவல்பட்டி யில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் ரூபாய் 13.57 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம், விராமதி ஊராட்சியில் ரூபாய் 13.57 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம் ஆக மொத்தம்ருபாய் 2 கோடியே 57 லட்சத்தில் முடிவற்ற 20 திட்டப்பணி களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் மக்களுக்கு அர்ப்பணித்து சிறப்புரையாற்றி னார் .

இந்த நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் சிவராமன், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எஸ். சண்முக வடிவேல், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், ஊராட்சி மன்றத் தலைவர் பாஸ்கரன், அயலக அணி துணை அமைப்பாளர் சன்சீமான் சுப்பையா, வட்டாட்சியர் மாணிக்க வாசகம், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் ஒன்றிய செயலாளர் விராமதி மாணிக்கம் மற்றும் அரசு அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### நீடாமங்கலம் வெள்ளையாற்றில்

# ரூ.2.38 கோடி மதிப்பில் பாலம் திட்டப் பணி!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார்! பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார்!

திருவாரூர், மார்ச் 14 -

மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் ஆய்குடி வெள்ளையாற்றில் மக்களின் கோரிக்கையை ஏற்று 2.38 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கும் பணிகளுக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா அடிக்கல் நாட்டினார். சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், ஒன்றிய பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி திருவாரூர் மாவட்டத்திலும் பல்வேறு நலத்திட்டங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக மன்னார்குடி மக்களுக்கு கொடுத்திருந்த வாக்குறுதிகளில் அனைத்தையும் நிறைவேற்றிட டி.ஆர்.பி.ராஜா முனைப்புடன் செயலாற்றி வருகிறார்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பல்வேறு நலப்பணிகளை துவக்கிவைத்தார். நீடாமங்கலம் ஒன்றியம் ஆய்குடி மக்கள் தங்கள் தேவைகளுக்கு வெளியூர் செல்ல 4 கிலோமீட்டர் பயணித்து வெள்ளை ஆற்றை கடந்துவர வேண்டிய சூழலில் , தங்களுக்கு பாலம் கட்டித்தர தமிழ்நாடு அரசிடம் கோரிக்கை அளித்து இருந்தனர்.

இந்த கோரிக்கையை தாயுள்ளத்தோடு பரிசீலித்த முதல்வர் தளபதி அவர்கள் வெள்ளை ஆற்றின் குறுக்கே அணை கட்ட ஆனையிட்டதை அடுத்து அந்த பணிகளுக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ,மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ மற்றும் ஒன்றிய பெருந்தலைவர் சோம. செந்தமிழ் செல்வன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கேவிகே ஆனந்த, கவியரசு, மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணி சேகர், மாவட்டஊராட்சி உறுப்பினர் ராணி சுந்தர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ராஜலேட்சுமி, ஜெனிட்டா ,ஊராட்சி மன்ற தலைவர் கவிதா ஸ்ரீ மற்றும் அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

# வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 14 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறை விஜயா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டம் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரு மான நிவேதா எம். முருகன் பேசினார். கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம். எம்.சித்திக், ஏ.சி.என்.சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி. என்.ரவி, இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேது. ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், ஞான.இமையநாதன், ப.முருக மணி, கு.வைத்திய நாதன், ஏ.ஆர்.ராஜா நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ. கபிலன், பி.சிவதாஸ், சங்கரநாராயணன், நத்தம் வின்செண்ட், ஹர்சத், அ.காந்தி, எம்.பி.கென்னடி, சுபா.நெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ். கே.முத்துராஜா, என்.அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே. மருது, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகர், ஒன்றியக் குழு தலைவர்கள் கமலஜோதிதேவேந்திரன், கே.மகேந்திரன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.என்.என்.செந்தில், ஆர்.முருகன், காளி. தேசப்பன், திபா சத்தியேந்திரன், வெடிபாலமுருகன், இரா.மனோகரன், ஆர்.தன்ராஜ், டி.ராஜ்குமார், சாந்தி, அறிவழகன், எஸ்.பாலாஜி, கே.விக்னேஷ், எம்.எஸ். முத்து குபேந்திரன், வை.சௌமியன், இரா.முருகப்பா, ஆர். எஸ்.ஸ்ரீதர், வைத்தியநாதன், டி.ராஜ்குமார், செல்வ ராஜ், பெருவீரமணி, இரா.கனகராஜ், பிரபாகர், மாவட்ட இளைஞர்அணி துணைஅமைப்பாளர்கள் சர்வேதயன், கோசி.திருமாவளவன், ஜெ.ஜுபையர் அகமது, வினோத்பாண்டி மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர்கள் க.சுரேஷ், மற்றும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:**

மயிலாடுதுறை மாவட்டத்தை மேம்படுத்தும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தின் உட் கட்டமைப்புகளை செம்மைப்படுத்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ. 114.48 மதிப்பில் 7 தளங்களுடன் கட்ட கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கால் நாட்டி அந்த கட்டிடப் பணிகள் வேகமாக முடிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மயிலாடுதுறைக்கே நேரடியாக வருகை தந்து கட்டிடத்தை திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் வழங்கப்பட்ட மாபெரும் வரவேற்பில் கலந்து கொண்ட மாவட்டப் பொறுப்பு அமைச்சர், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளு மன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவருக்கும் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட ஓ.எம்.ஆர். படிவத்தை காலத்தில் பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்திடம் ஒப்படைத்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கும், பணியை சிறப்பாக முடித்து தந்த ஒன்றிய, நகர, பேருர் கழக நிர்வாககள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பி.எல். ஏ.2 மற்றும் பி.எல்.சி.யைச் சேர்ந்தவர்கள், கழகத்தினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், தலைமைக் கழகம் அறிவித்தவாறு இல்லம் தோறும் ஸ்டாலின் குரல் திண்ணை பிரச்சாரத்தை கழக அரசின் துண்டு பிரசுரங்களை எடுத்துக் கொண்டு மாவட்டக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட பூத் பொறுப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறி மாவட்டம் முழுவதும் முதற்கட்டமாக திண்ணை பிரச்சாரத்தை செய்திட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பூத்துகளுக்கு தங்கள் பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களிடம் கலந்து பேசி நேரடியாகச் சென்று கழக நிர்வாகிகள், கழகத்தினரை கொண்டு தொடர்ந்து கழக அரசின் சாதனைகளையும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத போக்கையும் தொடர்ந்து வாக்காளர்களிடம் சென்று எடுத்து கூறி வாக்குகளை சேகரிக்கும் பணியை தொடர்ந்து செய்திட வேண்டும் என்றும், வாக்காளர்களை சந்திக்கும் போது அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அவற்றை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மூலம் மாவட்டக் கழகதிடம் தெரிவித்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்திட ஏற்பாடுகளை செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### புதுக்கோட்டை திருவப்பூர்

# முத்துமாரியம்மன் திருக்கோயில் தேர் திருவிழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்றனர்!

புதுக்கோட்டை மார்ச் 14-

புதுக்கோட்டை திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் தேர் திருவிழாவில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் த சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் தி ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 11.03.2024 அன்று கலந்துகொண்டு, தேரினை வடம்பிடித்து இழுத்தார்கள்.

புதுக்கோட்டை திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் மாசிப் பெருவிழா, 25.02.2024 அன்று துவங்கிய பூச்சொரிதல் விழாவின் ஒருபகுதியாக பக்தர்களால் முத்து மாரியம்மன் திருக்கோயி லுக்கு வழங்கப்பட்ட பூக்கள் அனைத்தும் அம்பாளுக்கு சார்த்தப்பட்டு 26.02.2024 அன்று பக்தர்களுக்கு பூக்களைப் பிரசாதமாக வழங்கப்பட்டது. அதன்படி, 11.03.2024 அன்று நடைபெற்ற தேர் திருவிழாவில், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி , சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் கலந்து கொண்டு, தேரினை வடம் பிடித்து இழுத்தார்கள். இந்த திருவப்பூர் முத்து மாரியம்மன் திருக்கோயில் விழாவானது 18.03.2024 வரை நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி , நகர் மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், ஆ.செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா திட்டம்!

மாஸ்கோ, மார்ச் 14-

ரஷியா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2 ஆண்டுகளை கடந்து நீடித்து வருகிறது. இதில், உக்ரைனை நிலம், நீர் உள்ளிட்ட பகுதிகளில் சூழ்ந்து கொண்டு ரஷியா போர் தொடுத்து வருகிறது.

இந்நிலையில், ரஷிய அதிபர் புதின் அந்நாட்டு தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் பேசியதாவது, அணு ஆயுத போரைத் தூண்டும் வகையில் எந்த ஒரு செயலிலும் அமெரிக்கா ஈடுபடாது என்று நம்புகிறோம். ஆனாலும் நாங்கள் அதற்கு தயாராகவே உள்ளோம். என்றார்.

அப்போது அவரிடம் உக்ரைன் போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்துவது குறித்து சிந்தித்தது உண்டா என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு புதின், அதற்கான அவசியம் இருந்ததில்லை. உக்ரைனில் மாஸ்கோ அதன் இலக்கை அடையும்.

பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் எப்போதும் தயாராகவே உள்ளோம். என்றார்

இவ்வாறு அணு ஆயுதங்கள் பயன்படுத்துவது தொடர்பாக புதின் எச்சரிக்கை விடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




சிவகங்கை அரண்மனை வாயில் முன்பாக மகளிரை அவமரியாதையாக பேசிவரும் நடிகை குஷ்பூ மற்றும் பா.ஜ.க.வைக் கண்டித்து சிவகங்கை மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் மாநில மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ. தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதிஜோன்ஸ் ரூசோ, மாவட்ட மகளிரணிஅமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணிஅமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில்ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி, சார்பில் ஏரியூர் ஒன்றியம் செம்மனூர் கிராமத்தில் முதலமைச்சர் , கழக தலைவர்அவர்களின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் டி. பி.எஸ்.இளையசங்கர் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் சாந்தரூபன் ஏற்பாட்டில் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி 500 தென்னங்கன்றுகள் நட்டு அன்னதானம் உள்ளிட்ட நல உதவிகள் வழங்கினார். உடன் ஏரியூர் ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் என்.செல்வராஜ், தருமபுரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர், துணை அமைப்பாளர்கள் அன்பழகன்,நாகராஜ்,இளம்கவி, மாரி, செல்வராஜ், சுகுமார், தருமபுரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பெரியண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொணடனர்.




கடலூர் மாவட்டத்தில் ஏழு புதிய பேருந்துகள் உட்பட விழுப்புரம் கோட்டத்தில் 52 பேருந்துகள் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி, மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். 25 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய2 ஓட்டுநர்களுக்கு தங்கப்பரிசு மற்றும், 10 ஆண்டுகள் விபத்தின்றி பணியாற்றிய 218 ஓட்டுநர்களுக்கு வெள்ளிப் பரிசுகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கி பாராட்டினர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ், மேயர் சுந்தரி ராஜா, போக்குவரத்து தொ.மு.ச. தங்க.ஆனந்தன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், போக்குவரத்து தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

### தமிழகத்துக்கு எதிராக போதைப்பொருள் நடமாட்டம் என்ற

# புதிய ஆயுதத்தை கையில் எடுத்துள்ள ஆளுநர்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, மார்ச். 14-

புதுக்கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சார்பில் அரசின் சாதனை விளக்க புகைப் படக் கண்காட்சி புதுக்கோட்டை நகராட்சி கலைஞர் பூங்காவில் 11.3.2024 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 17ஆம் தேதி வரை புகைப்படக் கண்காட்சி நடைபெற உள்ளது சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஆட்சியர் மெர்சி ரம்யா உள்ளிட்டோர் புகைப்படக் கண்காட்சியை தொடங்கி வைத்தனர்.



மாணவ - மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடை பெற்றது. புகைப்படக் கண் காட்சியில் அரசின் சாதனை கள் தமிழக முதல்வரின் மக்கள் நல திட்டங்கள் குறித்த விளக்க புகைப்படங் கள் ஆகியவை வைக்கப்பட் டுள்ளது

இதன் பின்னர் செய்தியா ளர்களிடம் பேசிய அமைச் சர் எஸ்.ரகுபதி

முன்னாள் அமைச்சர் பொன்முடி மீதான வழக்கில் உச்ச நீதிமன்றம் தண்ட னையை நிறுத்தி வைத்துள் ளது வரவேற்கத்தக்கது.

எம்.எல்.ஏ. பதவி திரும்ப அவருக்கு கிடைத்துவிட்டது. முதல்வர் நினைத்தால் நாளையே அவரை மீண்டும் அமைச்சராக ஆக்கலாம். இந்த தீர்ப்பு எதிர்க்கட்சிக ளின் விமர்சனத்திற்கு ஒரு பதிலடியாக உள்ளது

நாடாளுமன்ற தேர்தலில் எங்களுக்கு அனைத்துமே சாதகமாக உள்ளது. தி.மு.க. விற்கு அடித்தளம் நன்றாக உள்ளது. பேஸ்மென்ட் எங் களுக்கு நன்றாக உள்ளது

பேஸ்மென்ட் மட்டும் அடித்தளம் இல்லாத ஒரு சில கட்சிகள் தான் பொய் யான குற்றச்சாட்டுகளை எங்கள் மீது கூறி வருகிறது.

எதையாவது செய்து மக் களை மாற்ற முடியுமா என்று முயற்சி செய்கின் றனர்.

பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கிறார் கள். எந்த ஒரு பொய் பிரச் சாரமும் தமிழக மக்களை மாத்திராது.

ஆளுநர் புதிதாக ஒரு ஆயு தத்தை தற்போது கையில் எடுத்துள்ளார் இவ்வளவு நாள் அவர் தூங்கி உள்ளார் என்று நினைக்கிறேன்.

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் உள் ளதாக அவர் குற்றம் சாட்டி யுள்ளார். எங்கே நடமாட் டம் உள்ளது என்று அவர் கூற வேண்டும். தமிழக அரசு போதைப் பொருள் நட மாட்டம் இருந்தால் உடன டியாக அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இதேபோன்று மீதமுள்ள அமைச்சர்களின் குற்றச் சாட்டுகளும் பொய் என்று நிரூபிக்கப்படும். நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை.

போதைப்பொருள் தமிழ கத்தில் அதிக அளவு உள்ளது என்று எடப்பாடி பழனிச் சாமி கூறுவது வேடிக்கையா னது. இவருடைய ஆட்சி காலத்தில்தான் ஒரு அமைச் சரே போதை பொருள் விற் பனையில் சம்பந்தப்பட்டுள் ளார் என்று தற்போது சி. பி.ஐ. விசாரணை செய்வ தற்கு ஆளுநர் ஒப்புதல் வழங் கியுள்ளார்.

தமிழகத்தில் போதை பொருள் நடமாட்டம் கட் டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்கரைகளும் கண்கா ணிக்கப்பட்டு வருகிறது. பிர தமர் மோடி மீண்டும் மூன்று தினங்கள் தமிழகத்திற்கு வரு கிறார் அவர் 30 நாள் வந்தா லும் 300 நாள் இங்கே தங்கி இருந்தாலும் ஒரு இடத்தில் கூட பா.ஜ.க. வெற்றி பெற முடியாது.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டியளித்தார்.

### தா.பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர்

# மறைந்த வா.சௌந்தரராஜன் இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அமைதி ஊர்வலம் சென்று அஞ்சலி செலுத்தினார்!

அரியலூர், மார்ச், 14-

அரியலூர் மாவட்டம் தா.பழூர் மேற்கு ஒன்றிய செயலாளர் வா. சௌந்தர் ராஜன் வாகன விபத்தில் உயிரிழந்தார்.

அன்னாரின் இறுதி ஊர் வலம் அவரது இல்லத்தில் இருந்து மாலை 5 மணியள வில் புறப்பட்டது, இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ஜெகதீசன், செயங்கொண் டம் சட்டமன்ற உறுப்பி னர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, பெரம்பலூர் மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் குன்னம் சி.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலா ளர்.

சி.சந்திரசேகரன், ஒன்றி யகழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ.அறிவ ழகன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, இரா.மணிமாறன், ரெங்க. முருகன், ஆர்.கலியபெரு மாள், வி.எழில்மாறன், நக ரகழக செயலாளர்கள் இரா.முருகேசன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர். இராமராஜன், மாவட்ட தொண்டரணி அமைப்பா ளர் முகானந்தம், அருண்சி வம், சிவரமேஷ், சுரேஷ்,

மற்றும் மாவட்ட, ஒன் றிய, நகர கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் ஊர் வலமாகச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

இறுதியாக மாவட்ட கழக செயலாளர், போக்கு வரத்துதுறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இடுகாட் டில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.





அரியலூர் மாவட்டம், தா.பழூர் மேற்கு ஒன்றியச் செயலாளர், மறைந்த வா.சவுந்திரராஜன் உடலுக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றார். கழக நிர்வாகிகள், கழகத்தினர் ஏராளமானோர் இதில் கலந்துகொண்டனர்.

# கடம்பத்தூரில் தெருமுனைக் கூட்டம்

திருவள்ளூர், மார்ச் 14–

கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் பிறந்த நாள் மற்றும் உரிமை களை மீட்க ஸ்டாலினின் குரல் தெரு முனை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே.அரிகிருஷ்ணன் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பி.கே.நாகராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் வி.ராஜசேகர், கே.செங் குட்டுவன், மெய்யழகன், ஜெகதாம் பாள், சி.ஆர்.குமரன், கொப்பூர் டி.திலீப்குமார், சி.ரவிக்குமார், ஆர். மோகனசுந்தரம், திருவேணி நாகராஜ் ஆகியோர் முன்னிலையில், கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப் பினர் வி.ஜி.இராஜேந்திரன் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி களை வழங்கி மேலும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு கால சாத னைகளை விளக்கி சிறப்புரையாற்றி னார். நிகழ்ச்சியில் கே.திராவிட பக் தன், ஆர்.டி.இ.ஆதிசேஷன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், சி.சு.ரவிச்சந்திரன், மண்புகழ் மனோக ரன், வி.எஸ்.நேதாஜி, எம்.பன்னீர் செல்வம், எஸ்.பாலசுப்பிரமணி, கே.ஏ. மதியழகன், கே.பி.தமிழ்ச்செல்வன், ஆர்.ராஜேந்திரகுமார், எம்.சேகர், ஏ.பெருமாள், ஏ.எஸ்.மணி, ஆர்.வாசு, பிரகாஷ்ஞான ஒளி, ஆர்.ரமணன், எம்.முத்தமிழரசன், எம்.கார்த்திக், பி.ஜானகிராமன், எம்.முரளி, ஆர்.ராஜ லிங்கம், பி.பாபு, கே.பாலாஜி, எஸ்.சண் முக ஆனந்தன், எஸ்.லோகிதாசன் உள் ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட புட்டுத்தோப்பில் தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழைப் பெண்கள்களுக்கு திருமண நிதியுடன் தாலிக்கு தங்கத்தை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன் பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், மண்டல தலைவர் பாண்டிச்செல்வி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### முதலமைச்சர் தரும் ‘மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை’ இகழ்ந்து பேசும்

# நடிகை குஷ்புவுக்கு - தமிழ்நாட்டுப் பெண்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## அமைச்சர் கீதா ஜீவன் கடும் கண்டனம்!

சென்னை, மார்ச் 14-

“பா.ஜ.க.,வின் நடிகை குஷ்பு அவர்களே! அடக்கி வாசியுங்கள்! தமிழ்நாட் டுப் பெண்கள் உங்களுக் குத் தக்க பாடம் புகட்டுவார்கள்!” என அமைச்சர் திருமதி, கீதா ஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கலைஞர் மகளிர் உரி மைத் தொகை பெறும் பெண்களை இழிவுபடுத் திய நடிகை குஷ்புவுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலா ளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான திருமதி, கீதா ஜீவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

நடிகை குஷ்பு, முதல மைச்சர் வழங்கும் கலை ஞர் மகளிர் உரிமைத் திட் டத்தைப் பற்றி மிக இழிவாகப் பேசியிருக்கி றார். குறிப்பாகத் தமிழ் நாடு அரசு பெண்களுக்கு வழங்கும் தொகையைப் பிச்சை போடுவதாக இழிவு படுத்தியுள்ளார். உரி மைத்தொகையைப் பெறு



கின்ற அந்த ஒரு கோடியே 16 லட்சம் பெண்களையும் இழிவுபடுத்தி நடிகை குஷ்பு பேசியிருப்பது மிக வும் வருத்தத்தைத் தருகிறது.

பெண்களுடைய வாழ்க்கை நிலையை அறி யாதவர் அவர் என்பதை நாம் இதன் மூலம் அறிய முடிகிறது. அவருக்கு என்ன தெரியும்?

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் நடுத் தர வாழ்க்கை முறை என்ன வென்று தெரியுமா? அந்த ஆயிரம் ரூபாய் எவ்வளவு பயன் தருகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? ஒன் றுமே தெரியாமல் வீட்டில் இருந்து வெளியே வந்து மைக்கைப் பார்த்துப் பேசு வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மாதிரி பேசக்கூ டாது. நிலை அறியாமல் நீங்கள் பேசுகிறீர்கள் என் பதை நான் சொல்ல விரும் புகிறேன். ஏனென்றால், உங்களுக்குத் தெரியாது. மாதம் ஆயிரம் ரூபாய் என் பது உங்களுக்கு அப்படித் தான் தெரியும். நீங்கள் கோடியில் புரள்பவர். பண வசதி படைத்தவர். நீங்கள் பெரிய நடிகர். உங்களுக்கு அந்த ஆயிரம் ரூபாய் அப்ப டித்தான் தெரியும். ஆனால் இந்த மாதிரி ஆயிரம் ரூபாய் வைத்துக் குடும்பம் நடத்துகிற, வாழ்வாதாரத் துக்காக, ஒரு மருத்துவச் செலவுக்காக,பிள்ளைகளின் படிப்புக்காக எத்தனையோ பேருக்குப் பலன் தருகிறது.

அதனைச் சிலர் “முதல மைச்சர் எனக்குத் தரும் சீர்” என்று சொல்கிறார்கள். சில தாய்மார்கள், “என் பிள்ளைகள் என்னைப் பார்த்துக் கொள்ளாவிட் டாலும், மவராசன் முதல மைச்சர் எனக்கு ஆயிரம் ரூபாய் தந்து என்னைப் பார்த்துக்கொள்கிறார்” எனச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு வாழ்வாதா ரத்துக்கு உதவக்கூடிய உரி மைத்தொகையை நீங்கள் அசால்டா “பிச்சை போடுகி றார்” என்ற வார்த்தையைச் சொல்கிறீர்கள். பிச்சை என் பதன் அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? நீங்கள் உங் கள் போக்குக்கு வார்த்தை களை இப்படி எல்லாம் பயன்படுத்தாதீர்கள்.

நிச்சயமாக இதற்கு எங்க ளுடைய தமிழ்நாட்டுப் பெண்கள் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்க ளும் உங்களுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள். அவர்கள் உங்களைப் பார்த் துக் கொள்வார்கள். அடக்கி வாசியுங்கள் என் பதை மட்டும் நான் கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு ள்ளார்.

### கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட

# 469 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், மார்ச். 14 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு. பெ.சாமிநாதன் 06.03.2024 புதன்கிழமை அன்று திருப் பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், நத்தக்காடையூர் லட்சுமி மஹால் திருமண மண்டபத்தில் நத்தக்காடை யூர் மற்றும் பழைய கோட்டை ஊராட்சிகளில் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப் பட்ட12 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட் டில் இலவச வீட்டுமனைப்பட்டா களை யும், 145 பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகளை யும், 503 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீடு அட்டை கள் என மொத்தம் 660 பய னாளிகளுக்கு ரூ.5.63 இலட் சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட் டங்களை அறிவித்து சிறப் பாக செயல்படுத்தி வருகி றார்கள். எந்தவொரு திட்ட மானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக் கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் காங்கேயம் ஒன்றி யத்திற்குட்பட்ட நத்தக்கா டையூர், பழையகோட்டை ஊராட்சிகளில் கலைஞர் மக்கள் சேவை முகாம் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங் கப்படவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டலோடு காங்கே யம் ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்க ளின் ஒருங்கிணைப்பில் சம் பந்தப்பட்ட அலுவலர்கள் அந்தந்த ஊராட்சிக்கு நேரில் வந்து நம்முடைய வேண்டுகோளை ஏற்று பல விண்ணப்பங்கள் பெறப் பட்டது. மின் இணைப்பு உரிமைத்தினுடைய பெயர் மாற்றம் செய்யதல், ஆதார் அட்டை, குடும்ப அட்டை யில் பெயர் சேர்ப்பது மற் றும் நீக்குவது, முதலமைச்ச ரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்திற்கான அடையாள அட்டைகள், அமைப்புசாரா தொழிலா ளர் நலவாரிய உறுப்பினர்க ளுக்கான விண்ணப்பங்கள், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்டு போன நபர்கள் அளிக்கும் விண்ணப்பங்கள், பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப் பம் ஆகிய விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பொதுமக் களை நேரில் சந்தித்து மனுக் களைப் பெற்று முடிந்த வரை இங்கேயே அதற்கான தீர்வுகள் காணப்பட்டது. பொதுமக்களுடைய சிரமங் களை தவிர்ப்பதற்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதில் பழை யகோட்டை ஊராட்சியில் 1156 மனுக்கள் பெறப் பட்டு 657 மனுக்களுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. இன்று 217 பயனாளிகளுக்கு அதற் கான தீர்வு காணப்பட்டது. நத்தக்கடையூர் ஊராட்சி யில் 1348 மனுக்கள் பெற் றப்பட்டு 668 பயனாளிக ளுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. தற்போது 246 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. மீத முள்ள மனுக்களுக்கு உரிய முறையில் பரிசீனை செய் யப்பட்டு முடிந்தளவு தீர்வு கள் வழங்குவதற்கு நம்மு டைய மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவாக நடவ டிக்கை எடுப்பார்கள் என் பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் என் கிற திட்டத்தை அறிவித்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் விண்ணப்பங்கள் பெறப் பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 85 ஆயிரம் குடும்ப அட்டைதா ரருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டு துண்டுப் பிரசங்கள் வழங்கப்பட்டு என்னென்ன வகையான முகாமில் என் னென்ன விண்ணப்பங்கள் கொடுக்கலாம் என தகவல் தெரிவிக்கப்பட்டு, வரப் பெற்ற மனுக்களை பரிசீ லனை செய்து உரிய சான்று களும், உத்தரவும் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆணையர் (கலால்) ராம்கு மார், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா. சேமலையப்பன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே. கே.சிவானந்தன், சி.கரு ணைபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் எ.கே.எஸ். கார்த்திகேயன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே. சண்முகசுந்தரம், காங்கே யம் ஊராட்சி ஒன்றியக்கு ழுத் தலைவர் மகேஷ்கு மார், காங்கேயம் வட்டாட் சியர் மயில்சாமி, காங்கே யம் ஒன்றியக்குழு உறுப்பி னர் எம்.ரவி உள்பட உள் ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப் பாளர்கள், துணை அமைப் பாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் புதிய கட்டிடத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 92 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.92.47 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரினை வழங்கினார்கள். உடன் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், இணை போக்குவரத்து ஆணையர் ஏ.ரவிச்சந்திரன், திருவள்ளூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் சீனிவாசன், ஒன்றிய கழக செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.


புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சோத்துப்பாளை ஊராட்சி சொக்கநாதபட்டி மற்றும் கணபதிபுரம் ஊராட்சி கணபதிபுரம் ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைத்து,அதே பகுதியில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கான பணிகளை டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் சாமிநாதன், ஊராட்சிமன்ற தலைவர்கள் முத்துச்சாமி, லட்சுமி ஆனந்தராஜ் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.


திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் துரை. சந்திரசேகரனின் மனித உரிமைக் காவலர் “தந்தை பெரியார் ” புத்தக வெளியீட்டு விழாவில் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் குலாம் மொய்தீன், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், இந்திய கம்யூனிஸ்ட் ஏ. வி. சரவணன், நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்செல்வி பிரபு, ம.தி.மு.க. பாபு கோவிந்தராஜ், வி.சி.க பெரியார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மருதம் ஒருங்கிணைப்பாளர் இரவி கார்த்திகேயன் ஒருங்கிணைத்தார்.

## திராவிட மாடல் அரசின் ‘காலை உணவுத் திட்டம்’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ உள்ளிட்ட திட்டங்களால்

# தமிழ்நாட்டுப் பொதுமக்கள் பெருமளவு பயனடைந்து வருகின்றனர்!

## முதல்வரிடம் - அரசின் 11 திட்டங்கள் குறித்த மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து - திட்டக்குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 14–**

**அரசின் 11 திட்டங்கள் குறித்த மதிப்பீடு மற்றும் ஆய்வறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்த பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த மாநில திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், “காலை உணவுத் திட்டம்’, “மக்களைத் தேடி மருத்துவம்” உள்ளிட்ட ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களால் பொதுமக்கள் பெருமளவு பயனடைந்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.**

**தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.03.2024) மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார்.**

அப்போது அவர் கூறியதாவது :

முதலமைச்சர் அவர்களை இன்று சந்தித்து மாநில திட்டக்குழுவில் கடந்த நான்கைந்து மாதங்களில் நாம் மேற்கொண்ட ஆய்வுப் பணிகள் குறித்த மொத்தம் 11 அறிக்கைகள் வழங்கியிருக்கிறோம். அந்த அறிக்கைகளை நான்கு வகைப்படுத்தலாம். ஒரு வகை என்னவென்றால் அரசின் திட்டங்கள் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்து அதற்குண்டான அறிக்கையை அரசுக்கு அளிப்பது. பொதுவாக அரசின் திட்டங்கள் அது எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கான ஆய்வு. அதற்கு பிறகு அரசு மாறி வரும் கால சூழலில் என்னவெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது பற்றியும், நிலவரம் குறித்து நான்கைந்து ஆய்வுகள்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் - பயனாளிகள், பயனாளிகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்பது பற்றி முதல் ஆய்வு.

இரண்டாவது ஆய்வு இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத சுகாதாரத் திட்டம், ‘மக்களை தேடி மருத்துவம்’ என்கின்ற திட்டம். இந்தத் திட்டத்தின் பலன் என்ன, இந்தத்திட்டம் எப்படி செயல்படுகிறது, அதன் பயனாளிகள் அது குறித்து எப்படி பார்க்கிறார்கள், அதிலிருந்து அவர்களுக்கு கிடைக்கக் கூடிய பலாபலன்கள் என்ன, அது குறித்து ஒரு ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்.

மூன்றாவது ஆய்வு - கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டங்கள் போல நம்முடைய அரசு பதவியேற்ற பிறகு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் செயல்பட்டது. அந்தத் திட்டம் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது. நகர்ப்புறத்தில் எதற்கு வேலைவாய்ப்பு திட்டம் என்ற விமர்சனம் வந்த பிறகு, அவை எங்கெல்லாம் செயல்படுகிறது, எப்படி செயல்படுகிறது என்பது குறித்தும், அவை எங்கு செயல்படவேண்டும் என்பது குறித்த ஆய்வு.

அதற்குப் பிறகு, பொதுவாக, வெவ்வேறு பிரிவுகளில் சமூகத்தில் சில நபர்கள் விடுபட்டு போவார்கள். அதுபோல, மிகவும் விடுபட்டுப் போன பிரிவு எதுவென்றால் பழங்குடியின மக்கள். அவர்கள் மிகவும் தொலைவில் இருப்பார்கள். திட்டங்கள் சென்று சேருமா, சேராதா என்பது பற்றி நமக்குத் தெரியாது. அதனால், அரசு இத்தனை திட்டங்கள் செயல்படுத்தியிருக்கிறது. பழங்குடியின மக்களுக்கு கிராமங்களில் என்ன மாதிரி திட்டங்கள் அவர்களுக்கு சென்று சேர்ந்திருக்கிறது, எந்தெந்தத் திட்டங்கள் சென்று சேருவதில்லை என்பதற்கான சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்த அறிக்கையையும் வழங்கியிருக்கிறோம்.

### ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாம்!

மற்றொரு முக்கியமான ஒரு ஆய்வு - ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி நகரவேண்டும் என்று சொன்னால், உயர் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும், அதற்கு நாம் செய்யவேண்டிய பணிகள் என்ன என்பதையும், நமது மாணவர்கள் என்ன மாதிரியான தேர்வுகள் எழுதிகிறார்கள். அவர்கள் எழுதும் கேள்வித் தாள்கள் என்ன மாதிரி இருக்கிறது. மனப்பாடம் செய்து எழுதுவதுபோல இருக்கிறதா, யோசித்து எழுதுவதுபோல இருக்கிறதா, என்பது பற்றியும் ஆய்வு. ஞாபகத் திறன் இருக்கிறதா, அவர்களுடைய திறன் தீர்வு செய்யக்கூடிய அளவுக்கு யோசித்து செய்யக்கூடிய அளவில் இருக்கிறதா என்பதை சோதிக்க வேண்டும். அந்த மாதிரி எந்த அளவிற்கு கேள்வித் தாள் இருக்கிறது, இல்லை என்பது குறித்து கலை, அறிவியல் மற்றும் பொறியியல் ஆகிய இரண்டு துறைகளிலும் எப்படி நம்முடைய தமிழ்நாடு பல்கலைக் கழகங்களில் இருக்கக்கூடிய கேள்வித் தாள்கள் இருக்கின்றன என்பது குறித்து ஆய்வு.

அதற்கு பிறகு இருக்கக்கூடிய நான்கு ஐந்து அறிக்கைகள் என்னவென்றால், இயற்கை வளம் சார்ந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் வளர்ச்சி என்பது வளம் குன்றாததாக இருக்கவேண்டும் என்பது பற்றியும், அந்த வளர்ச்சியில் ஏற்படும் சிக்கல்கள் என்ன என்பதையும், அதனை எப்படி எதிர்கொள்வது, கால நிலை மாற்றங்களால் என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றியும், அதன் வெவ்வேறு கூறுகளை பார்த்து ஆய்வுகள் செய்திருக்கிறோம்.

முதல் ஆய்வு - Heat Mitigation Strategy - வருடா வருடம் temperature அதிகமாகிக் கொண்டே செல்கிறது. அதை நாம் எப்படி எதிர்கொள்வது என்பதை, உலக நாடுகள் எவ்வாறு strategy செய்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஆய்வு செய்து அதுபோல தமிழ்நாட்டில் நாம் என்ன செய்ய வேண்டும். வெப்பத்தின் தாக்கத்திலிருந்து மக்களை எப்படி பாதுகாப்பது, குறைப்பது என்பது நெடுங்கால பணி, உடனடியாக நாம் செய்யவேண்டியது அவர்களை பாதுகாப்பது. அதை நாம் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து ஒரு strategy ஆய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை வழங்கியிருக்கிறோம்.



இரண்டாவது ஆய்வு - Lower Machine Strategy - உற்பத்தி மற்றும் போக்குவரத்து அதனால் ஏற்படும் emissionஐ எப்படி குறைப்பது.

மூன்றாவதாக, விளைநிலங்களில் சீமை கருவேல முள் மரங்கள் எந்த அளவிற்கு படர்ந்து விவசாய நிலங்களை பாதித்துக் கொண்டிருக்கின்றன, எப்படி அதை அகற்றுவது, எப்படி முற்றிலுமாக அழிப்பது என்பது குறித்து அதன் துறை சார்ந்த வல்லுநர்களை எல்லாம் அழைத்து அவர்களிடம் கலந்தாலோசித்து, அதன் சாத்திய கூறுகள் (viable strategy) என்பது பற்றி பகுத்தளித்து அதையும் வழங்கியிருக்கிறோம்.

### பச்சைப் பாலைவனங்கள்!

அடுத்ததாக, காடுகள் பச்சை பாலைவனங்களாக (Green Desert) மாறிக் கொண்டு வருகின்றன. ஒன்று அல்லது இரண்டு இனங்கள் (species) மற்ற எந்த specieயையும் வளரவிடாது. எல்லாவற்றையும் அழித்துவிடுகின்றன. நெடுங்காலத்தில் என்ன பிரச்சனை கொண்டு வந்து விடும் என்றால், வேறு எந்தத் தாவரமும் வராது. எந்த தாவரமும் வரவில்லை என்று சொன்னால், அந்த சூழலை சார்ந்திருக்கக்கூடிய விலங்குகள், அதுபோல நமக்கு நீராதாரமாக இருக்கக்கூடிய பச்சை வெளிகள் இவைகள் எல்லாம் காணாமல் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, அந்தப் பிரச்சனை எவ்வாறு தீர்வு காண்பது, நமக்கு மட்டும் அந்த பிரச்சனை இல்லை, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மேற்கு தொடர்ச்சி மலையின் கீழ் இருக்கக்கூடியவர்களுக்கு இந்தப் பிரச்சனை இருக்கிறது. அந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய துறை சார்ந்த வல்லுநர்களை எல்லாம் அழைத்து, இரண்டு நாட்கள் மாநாடு ஒன்றை நடத்தி, அவர்களிடமிருந்து கருத்துக்களை எல்லாம் கேட்டு, அந்தப் பிரச்சனையை எப்படி தீர்ப்பது என்பது பற்றி தொகுத்து ஒரு அறிக்கையாக அரசுக்கு அளித்திருக்கிறோம்.

### கடற்பாசி வணிக வாய்ப்பு!

அடுத்தது, கடற்பாசி மூலம் பெரிய வணிகம் செய்யக்கூடிய வாய்ப்பு அதற்கு இருக்கிறது. ஆனால், அதே சமயத்தில், மற்ற கடல்சார் உயிரினம் மற்றும் தாவரங்களை எல்லாம் அழித்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அதை நாம் எப்படி கையாளுவது என்பது குறித்து ஆய்வு செய்து, அறிக்கை அரசுக்கு வழங்கியிருக்கிறோம்.

இறுதியாக, தமிழ்நாட்டில் காடுகள் அழிந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை எவ்வாறு விஞ்ஞான பூர்வமாகவும், முறைப்படியாகவும், வேறு ஒரு அறிக்கையுடன் ஒப்பீடு செய்து, தற்போது தமிழ்நாட்டில் காடுகளின் நிலை என்னவாக இருக்கிறது என்பது குறித்து அந்த அறிக்கை கூறுகிறது.

இந்த 11 அறிக்கைகள் இன்றைக்கு அரசிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

### பேட்டி!

**கேள்வி :** காலை உணவுத் திட்டத்தினால் பள்ளிக்கூடங்களின் Ratio எவ்வளவு அதிகரித்துள்ளது,

**பதில் :** 100 சதவிகித சேர்க்கை (Enrollment) வந்துவிட்டோம். புதிதாக சேர்ப்பது என்பது பெரிய விஷயம் கிடையாது. இப்போது என்ன பிரச்சனை என்றால், வருகைப் பதிவு (Attendance) என்பது முன்பு 60 சதவீதம், 70 சதவீதம் சாதாரணமாக இருக்கும். இந்த காலை உணவுத் திட்டம் வந்த பிறகு, சாதாரணமாக 90 முதல் 95 சதவீதம் ரொம்ப சுலபமாக இருக்கிறது. இரண்டாவதாக, பள்ளிக் குழந்தைகள், பள்ளிக் கூடத்திற்கு போகமாட்டேன் என்று அடம்பிடிப்பதில்லை. குழந்தைகள் 9 மணிக்கு பள்ளிக்கூடம் என்பது தற்போது 7.30 மணி முதல் 8 மணிக்குள் பள்ளிக்கூடம் செல்வது சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. மூன்றாவதாக, குழந்தைகள் காலை உணவை விரும்பி சாப்பிடுவதாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் சொல்லக் கூடிய விஷயம் என்னவென்றால், குழந்தைகள் மிகவும் சோர்வாகவும், மயக்கத்தோடும் தற்போது எதுவும் இல்லை என்று சொல்கிறார்கள். இன்னும் குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், குழந்தைகள், பள்ளிக்கூடத்தில் தரும் உணவு போல ஏன் வீட்டில் தருவதில்லை என்று பெற்றோர்களிடம் கோரிக்கை வைக்கிறார்கள். பெற்றோர்கள், குழந்தைகள் அதை சொல்வதாக சொல்கிறார்கள். இதிலிருந்து காலை உணவுத் திட்டம் வாயிலாக தெளிவாக தெரிய வருகிறது.

இதற்கு முன்பு ஒரு ஆய்வு செய்தோம். அதனுடைய தாக்கம் (impact) எப்படி இருந்தது என்றால் , மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் வருகைப் பதிவு அதிகரிப்பது என்பது அந்த dataவிலிருந்து தெரிகிறது. அதையும் மாநில திட்டக் குழுவின் மூலமாக ஆய்வு செய்து கூறினோம். தற்போது ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக தாய்மார்களிடம் இருந்து பெரிய வரவேற்புப் பெற்றிருக்கிறது. காலை எழுந்தவுடன் குழந்தைகளை எழுப்பி, சாப்பாடு வழங்கி அவர்களை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது என்பது ஒரு தனி வேலை. அந்த வேலையிலிருந்து பெரிய pressure லிருந்து விடுதலை ஆகிவிட்டோம் என்பது பெற்றோர்கள் கூறும் கருத்து. இரண்டாவதாக, குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சந்தோஷமாக செல்கிறார்கள். இவைகள் இரண்டும் தான் மிகவும் குறிப்பாக சொல்லவேண்டிய கருத்து.

மூன்றாவதாக, குழந்தைகள் சாப்பிட்டார்களா, சாப்பிடவில்லை என்பது பெற்றோர்களின் கவலையாக இருந்தது. இப்போது அந்த கவலை இல்லை என்று சொல்கிறார்கள். தற்போது, நிம்மதியாக இருப்பதாக கூறுகிறார்கள். இவையெல்லாம் ஆய்வு செய்ததிலிருந்து கிடைத்திருக்கிறது.

**கேள்வி :** Nutritionயை ஆய்வு செய்ய வேண்டுமா

**பதில் :** அதற்குண்டான Bench mark செய்திருக்கிறோம். இது one time impact study கிடையாது. ஐந்தாறு மாதங்களுக்கொரு முறை செல்லவேண்டும். தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கைக்குப் பிறகு ஐந்தாறு மாதங்கள் கழித்து திரும்பவும் ஒரு ஆய்வு செய்ய வேண்டும். இதை சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள மருத்துவர்கள் செய்கிறார்கள். அதன் வழியாக அவர்களுடன் இணைந்து தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மருத்துக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய மருத்துவ பேராசிரியர்கள் மூலமாக ஆய்வு செய்யப்படுகிறது.

### உணவுமுறை!

**கேள்வி :** உணவுமுறை பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா

**பதில் :** இப்போது இருக்கக்கூடிய உணவு முறைகள் பிடித்திருக்கிறது. குறிப்பாக சாம்பார் அவர்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், இட்லி, தோசை கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். இட்லி, தோசை கொடுப்பதால் என்ன சிக்கல் வரும் என்றால், அனைத்து இடங்களிலும் இதை கொடுக்க முடியுமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**கேள்வி :** நகர்புற வேலைவாய்ப்பு அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் :** Demand இருக்கிறது. பெரிய நகரங்களில் அது தேவையில்லை. சென்னை போன்ற நகரங்களில் சம்பளம் கொடுத்தால் யாரும் வேலைக்கு வரமாட்டார்கள். அதேசமயத்தில், நகர்ப்புறம், கிராமப்புறம் என்று பிரிக்கும்போது, அந்த விளிம்பு பகுதிகளில் உள்ளவர்களுக்கு நிறைய demand இருக்கிறது. அங்கு வேறு வேலைவாய்ப்பு கிடையாது. ஆனால், பெரிய நகரங்களில், எத்தனையோ வேலை இருக்கும். அந்த மாதிரி இடங்களில் தான் மிகவும் தேவைகள் இருக்கும். தற்போது Muni cipalities போன்ற இடங்களில் இந்த திட்டத்தை விரிவு படுத்தியிருக்கிறோம்.

**கேள்வி :** காலை உணவு திட்டம் வந்த பிறகு வருகை பதிவு 90 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை வருகிறார்கள். மீதம் உள்ள 10 சதவீதம் பேர்

**பதில் :** புலம்பெயர் (Migrant) போன்ற காரணங்களால் பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் enroll ஆகி திரும்பவும் புலம்பெயர்ந்து வேறு ஊருக்கு போய்விடுவார்கள்.

**கேள்வி :** நகர்புற வேலைவாய்ப்பு CSR நிதியிலிருந்து செய்யப்படுகிறதா

**பதில் :** முழுக்க முழுக்க அரசு பட்ஜெட்டின் மூலமாக வழங்கப்படுகிறது.

**கேள்வி :** பழங்குடியின மக்கள் எந்த பகுதிகளில் அதிகமாக வசிக்கிறார்கள். முறையாக திட்டங்கள் போய்ச் சேருகிறதா, சாலைகள் வசதிகள் இருக்கிறதா அது பற்றி.

**பதில் :** அதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட துறையின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். இந்த திட்டங்கள் எல்லாம் சரியாக போய்ச் சேருவதற்கு என்னென்ன சிக்கல்கள் இருக்கிறது என்பதற்கான பட்டியல் ஒன்றை தயாரித்து குறிப்பாக எங்கெங்கு பிரச்சனை இருக்கிறது என்பதையும் பெறப்பட்டு தற்போது தலைமைச் செயலாளரிடம் கொடுத்து வந்திருக்கிறோம். தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரிடம் வழங்கி அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**கேள்வி :** ஊட்டச்சத்து அதிகரிப்பது பற்றி

**பதில் :** ஆரோக்கியம் சம்பந்தமாக என்னென்ன பிரச்சனைகள் இருக்கிறது போன்ற விஷயங்கள் எல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது.

**கேள்வி :** சீமைக் கருவேல மரங்கள் குறித்து தொடர்ந்து நீதிமன்றங்கள் மாநில அரசுகளுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செயல் படுத்தவில்லை அது பற்றி..

**பதில் :** சீமைக் கருவேலை மரங்களை ஒரு தடவை எடுத்தால் போதாது. அதை தொடர்ந்து 5 வருடங்களுக்கு கண்காணித்துக் கொண்டிருக்கவேண்டும். எந்த மாநிலங்களிலும் முழுமையாக எடுக்கவில்லை என்றும், எல்லோரும் சோதனை செய்துதான் பார்க்கிறார்கள். விளைநிலங்களும் பாதிக்கப்படுகிறது. சோதனை அடிப்படையில் என்ன success இருக்கிறது என்பதற்கு அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான resources mobilize செய்வது தான் அரசின் பெரிய சவாலாக இருக்கிறது.

இவ்வாறு ஜெ.ஜெயரஞ்சன் பேட்டியளித்தார்.


திருப்பூர், உடுமலைப்பேட்டை நகர கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில், நகர கழக செயலாளர் செ.வேலுச்சாமி முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா, அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சிறப்புரையாற்றினர். இதில் இரா.ஜெயராமகிருஷ்ணன், பிரபாவதி பெரியசாமி, கு.சண்முகசுந்தரம் எம்.பி. உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள், பி.எல்.ஏ2 மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் செ.இராமலிங்கம் எம்.பி., அரசு கொறடா முனைவர் கோவி.செழியன், தொகுதி மேற்பார்வையாளர் வேதரெத்தினம், மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, மிசா.என்.மனோகரன், ஜெ.சுதாகர், இர.உதயசந்திரன், பேரூர் செயலாளர்கள் எஸ்.கே.பஞ்சநாதன், சுந்தர.ஜெயபால், கோ.சி.இளங்கோவன், டி.சப்பானி, மகாலிங்கம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மற்றும் விளையாட்டு உபகரணங்களை வாங்க 17 வீரர், வீராங்கனைகளுக்கு "TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’ நிதியிலிருந்து

# விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.64.55 லட்சம்!

## காசோலையினை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 64.55 லட்சத்திற்கான காசோலையினை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழக கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ள உள்ள நான்கு விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தலா ரூ.3.09 லட்சத்திற்கான காசோலையினையும் ஆசிய தகுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ள எ.லின்சியாவிற்கு ரூ.2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும் பல்வேறு பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 7 பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பாரா விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ. 36.69 லட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் பாராஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள சதாம் ஹுசைனிற்கு ரூ. 2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா ரூ.70,000 மதிப்பிலான காசோலை - பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க 2 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 1.70 லட்சத்திற்கான காசோலை என மொத்தம் 17 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

மேலும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வித் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் "TN Champions Foundation" அறக்கட்டளை நிதியிலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் "TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

# குஜராத் மாநில கடலோரத்தில் ரூ.480 கோடி போதைப்பொருள் சிக்கியது!

காந்திநகர், மார்ச் 14-

குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள தனியார் துறை முகங்கள் வழியாக வெளிநாட்டில் இருந்து கடத்தி வரப்படும் பெருமளவிலான போதைப்பொருட்கள் அங்கிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவதாக குற்றச்சாட்டு உள்ளது.

இந்நிலையில் குஜராத் தீவிரவாத எதிர்ப்பு படை, இந்திய கடலோர காவல்படை மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு ஆகியவை இணைந்து நடத்திய வேட்டையில் 480 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களுடன் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த 6 பேர் பிடிபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குஜராத்தின் போர்பந்தர் நகருக்கு அழைத்து வரப்படவுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் இதுவரை குஜராத் தீவிரவாத எதிர்ப்பு படை, இந்திய கடலோர காவல்படை மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு ஆகிய அமைப்புகள் மூன்றாயிரத்து 135 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்களை பறிமுதல் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை மே தினப் பூங்கா

# விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த பணிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2024) சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, மே தின பூங்காவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துவதற்காக அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 3.73 ஏக்கர் பரப்பளவு கொண்ட மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

மேலும் சிந்தாதிரிப்பேட்டை மே தின பூங்கா அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் உள்ளூர் சமூகத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டு, பல்வேறு நவீன விளையாட்டு வசதிகளை வழங்குகிறது. இவ்விளையாட்டு மைதானமானது, தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு சமூக ஒருங்கிணைப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விளையாட்டு மைதானத்தில் இரண்டு பூப்பந்து உள்விளையாட்டு அரங்கம், 100 பார்வையாளர்கள் அமர்வதற்கான இருக்கைகளுடன் கூடிய சறுக்கு வளையம், 50 முதல் 75 வரை பார்வையாளர்கள் அமர்வதற்கு ஏற்ற குத்துச்சண்டை வளையம், பொழுதுபோக்கு மற்றும் இருக்கைகளுடன் கூடிய பசுமை பகுதிகள், 6 வலை பந்தாட்ட மைதானம், அனைத்து வயதினருக்கான நடைப்பயிற்சி மற்றும் ஓடுதள பாதைகள், கிரிக்கெட் மற்றும்கால்பந்து போன்றபல்வேறுவிளையாட்டுகளுக்கான மைதானம் மற்றும் பயிற்சி நோக்கத்திற்காக 3 பயிற்சி வலைகள் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் நிறுத்துமிடம், குடிநீர், கழிப்பறைகள் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகளை கொண்ட மைதானமாக அமையவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா ராஜன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர்கள் எஸ்.மதன்மோகன், ப.ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜ மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.






# இடம் பொருள் கலைஞர்

61

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை!**




# அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை!

## மண் சார்ந்த நலவாழ்வுக்கான முயற்சி

இந்தியாவில் இரண்டு விதமான மருத்துவ முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று, ஆங்கில வழி நவீன மருத்துவம். இன்னொன்று, பாரம்பரிய மருத்துவம். ஆங்கில வழி மருத்துவத்தில் நவீன அறிவியலின் அடிப்படையில் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. பாரம்பரிய மருத்துவம் என்பது சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மருத்துவமுறைகளைக் கொண்டது.

2014-ஆம் ஆண்டு ஒன்றிய அரசில் பாரதிய ஜனதா கட்சி வந்தவுடன், மேற்கண்ட பாரம்பரிய மருத்துவ முறைகளில் யோகா, நேச்சுரோபதி எனும் இயற்கை வழி மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகியவையும் சேர்ந்துகொண்டன. இவற்றை 'ஆயுஷ்' என்ற ஒரே துறையின் கீழ் ஒன்றிய அரசு நிர்வகித்து வருகிறது.

தொடக்கத்தில், சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவ முறைகள் தனித்தனியாகச் செயல்பட்டு வந்த நேரத்தில், அவற்றை ஒரே இடத்தில் வழங்கும் தொலைநோக்குப் பார்வை முத்தமிழறிஞர் கலைஞரிடம் இருந்தது. ஆகவே, இந்த மருத்துவ முறைகளை மண் சார்ந்த மக்கள் நல்வாழ்வு முறையாக அங்கீகரித்து, அதற்கென தனி மருத்துவமனையை 70-களிலேயே யோசித்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரால் ஏற்படுத்தப்பட்டது தான், 'அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை'.

### 100 படுக்கை வசதிகளுடன்

பாரம்பரிய மருத்துவத்தில் பொதுமக்களுக்கு அதிக மருத்துவ வசதிகளை அளித்திடவும், ஏற்கெனவே அமைந்துள்ள மருத்துவ வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தகுந்த வழிவகைகளை ஆய்வு செய்து மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் அன்றைய காங்கிரஸ் ஒன்றிய அரசு, 'இந்திய மருத்துவமுறை மேம்பாட்டுக் குழு' என்ற ஒன்றை நியமித்தது.

அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் 200 படுக்கைகள் கொண்ட பாரம்பரிய மருத்துவமனை ஒன்றை சென்னை அரும்பாக்கத்தில், 'அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை' என்ற பெயரில், 8.25 இலட்சம் ரூபாய் செலவில் கலைஞர் அவர்களால் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக, ஆண்களுக்கு 60 படுக்கைகள், பெண்களுக்கு 40 படுக்கைகள் என 100 படுக்கை வசதிகளுடன் இயங்கத் தொடங்கப்பட்ட இந்த மருத்துவமனையில், சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி ஆகிய மூன்று மருத்துவமுறைகளிலும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. தொடக்கத்தில் 73 வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த இந்த மருத்துவமனையில் இன்று, நூற்றுக்கும் மேற்பட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவமனை திறக்கப்பட்ட ஆரம்ப நாட்களிலேயே நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர்.



### கோயில்தோறும் மருத்துவமனைகள்!

பாரம்பரிய மருத்துவ முறைகளை, மாட்டுச் சாணம், கோமியம் என்று 'மதம்' கலந்து பா.ஜ.க அரசு வழங்கி வரும் வேளையில், இவற்றை 'இயற்கை' கலந்து வழங்கியது நம் கழக அரசு. பொதுவாக, சித்த மருத்துவ முறை என்பது மூலிகைகள் சார்ந்து இயங்குவது. அந்த காலத்தில் மூலிகைகள் எல்லாம் காடுகள், மலைகள் போன்ற இடங்களில், கோயில்களைச் சுற்றி வளர்க்கப்பட்டன. மேலும் கோயில்களில் தல விருட்சங்கள் என்ற பெயரில் மூலிகை மரங்களும் வளர்க்கப்பட்டன. எனவே, சித்த மருத்துவ முறை இறை நம்பிக்கை சார்ந்த ஒன்றாகவும் இருந்தது.

அதனால்தான் இந்த மருத்துவமனையின் திறப்பு விழாவில் பேசிய கலைஞர் அவர்கள், "ஆண்டுக்கு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஒரு சித்த மருத்துவமனை இருக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்ட மிட்டுள்ளது. இதற்கான பணிகளை அறநிலையப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இலட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்கள் 49 உள்ளன. எனவே, 49 சித்த மருத்துவமனைகளை உருவாக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அன்றைய கல்வி மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில், "இந்திய மருத்துவம், இந்த நாட்டு மக்களுக்கு ஏற்ற மருத்துவமாகும். இந்த நாட்டின் தட்ப வெப்பம், உணவு முறை, உடல் பாகுபாடு ஆகியவற்றிற்கேற்ப அவற்றை ஆராய்ந்து வளர்த்து வந்த முறையாகும். இந்த மருத்துவத்தின் மூலம் நல்ல மருந்துகள், மிக மலிவாகக் கிடைக்க வாய்ப்புண்டு" என்றார்.



தமிழ்நாடு அரசு
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை
சென்னை-106.
தமிழ்நாடு அரசு கல்வி, சுகாதார அமைச்சர்
மாண்புமிகு திரு இரா.நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில்
தமிழ்நாடு அரசு முதலமைச்சர்
மாண்புமிகு திரு மு.கருணாநிதி அவர்களால்
17-9-1970 அன்று திறந்து வைக்கப்பட்டது.
மருத்துவர் சி.எஸ். உத்தமராயன்
இயக்குனர் இந்திய மருத்துவத்துறை
தமிழ்நாடு.

பாரம்பரிய மருத்துவ முறைக்கு மருத்துவமனை எழுப்பியது மக்கள் நலவாழ்வு தொடர்பான நடவடிக்கைகளில் ஒரு பகுதிதான். கலைஞரின் தலைமையிலான கழக அரசின் ஆட்சிக் காலத்தில்தான் சித்த மருத்துவ முறை மருத்துவம் மற்றும் குண பாடம் ஆகிய துறைகளில் முதுநிலைப் படிப்பு (1972) வழங்கப்படத் தொடங்கியது. அடுத்தபடியாக, சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழு (1973) தொடங்கப்பட்டது. இதன் வாயிலாக, பாரம்பரிய மருத்துவப் படிப்புகளுக்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டன. தொடர்ந்து மருந்தாளுநர் பட்டயப் படிப்பு (1974-75) தொடங்கப்பட்டது.

### மூலிகைப் பண்ணைகள்!

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனையை மட்டும் கட்டாமல், அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துகளை வழங்கும் மூலிகைகளை வளர்க்க, 'மூலிகைப் பண்ணை' அமைக்கவும் திட்டமிட்டார் கலைஞர் அவர்கள்.

"9 ஏக்கர் நிலத்தில் மூலிகைகள் வளர்க்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் உள்ள சித்த மருத்துவ நூல்கள் ஆராயப்படுகின்றன. பிணிகளைக் குணப்படுத்துவதில் சித்த வைத்தியம் தலைசிறந்தது என்பதனை மக்கள் உணர்ந்து, ஆர்வத்துடன் அதை நாடி வரும்படி செய்ய வேண்டும்" என்றார் கலைஞர்.

இந்த மருத்துவமனை, 50 ஆண்டுகளைக் கடந்து மக்களை நலமாக்கி வருகிறது.

**...வலம் வருவோம்**

### காவியிச குடியுரிமைச் சட்டம்!




மக்களவைத் தேர்தல் தேதி அறிவிப்பினை நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்க, தேசிய குடியுரிமைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது மோடி அரசு.

இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதை மாற்றி, இந்துக்களின் நாடு எனும் பிம்பத்தை உருவாக்க நடந்திடும் இந்த வேலைகளை 'காவியிச குடியுரிமைச் சட்டம்' நூலின் மூலம் அம்பலப்படுத்துகிறார் திருவாரூர் அர.திருவிடம்.

இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக எழும் குரல்களைக் கேள்விகளாக்கி, அதற்கான விடைகளைக் கொடுத்துள்ளார்.

அசாம் சம்பந்தப்பட்ட - அசாம் மாநிலத்துக்கு மட்டுமே என்று உருவாக்கப்பட்ட தேசிய குடியுரிமைப் பதிவேடு முறையை இந்தியா முழுவதற்கும் அமல்படுத்த வேண்டிய நோக்கம் என்ன? என்பதை, இந்த நூலில் அறிந்து கொள்ளலாம்.

அரசியல் சாசனத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராக மோடி அரசு கொண்டுவந்துள்ள இந்தச் சட்டம் ஒரு மோசடித் திட்டம் என்பதைப் புரிந்து கொள்ள காவியிச குடியுரிமைச் சட்டம் நூல் வழிகாட்டும்.

இந்த நூலினை சீதை பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

### ஃப்ளாஷ்பேக்





வே.பிரபு

### தோள் தாங்கிய கரம்!

2003-ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று எனது 18-வது பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணா அறிவாலயம் சென்று, தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றேன். இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களும் அப்போது உடனிருந்தார். அன்றைய சந்திப்பின்போது நான்தான் கடைசியாக அனுமதிக்கப்பட்டேன். புகைப்படம் எடுத்துக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் கிளம்பும் போது அவரது வாகனம் வரை, என் தோள் மீது கை வைத்தபடியே நடந்து வந்தது, இன்றைக்கும் மறக்க முடியாத நிகழ்வாக இருக்கிறது.

**-வே.பிரபு,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை,**
**நாமக்கல் கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### தனிக்கட்சியும் இணைப்பும்!

1961-ஆம் ஆண்டில், திராவிட நாடு கொள்கை தொடர்பாக பேரறிஞர் அண்ணாவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்து சென்றார் ஈ.வெ.கி.சம்பத். கழகத்தின் முதல் பிரிவாக அந்த சம்பவம் அமைந்தது. பிரிவுக்குப் பின்னர் சில நண்பர்களுடன் சேர்ந்து 'தமிழ்த் தேசியக் கட்சி' என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கினார் சம்பத். 1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இந்தக் கட்சி, படுதோல்வியைச் சந்தித்தது. காலப்போக்கில் அந்தக் கட்சி காங்கிரஸுடன் இணைக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

417

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.